தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.


9337501889, 7789941009



PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 173 04.02.2026 புதன்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 173 | Wednesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(4-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை -21
பிறை: தேய்பிறை
திதி
திருதியை பின்னிரவு 2.50 வரை பிறகு சதுர்த்தி.
நட்சத்திரம்:
பூரம் நள்ளிரவு 12.49 வரை பிறகு உத்திரம்.
யோகம்
அமிர்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி.
எமகண்டம்
காலை 7.30-9.00 மணி.
சூலம் -வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4 – 5 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | ஆதாயம் |
| மிதுனம் | போட்டி |
| கடகம் | புகழ் |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | தாமதம் |
| துலாம் | முயற்சி |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | மகிழ்ச்சி |
| கும்பம் | உயர்வு |
| மீனம் | உவகை |

# அண்ணா நினைவிடத்தில் தலைவர்கள் மரியாதை





**சென்னை,பிப்.4:**

பேரறிஞர் அண்ணாவின் 57-வது நினைவுநாளை ஒட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிரமாண்ட அமைதிப்பேரணி நடைபெற்றது. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அண்ணா சிலையில் இருந்து அண்ணா சதுக்கம் வரை பேரணி நடைபெற்றது.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைதிப் பேரணியை தொடங்கினார். பேரணியில் அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தொண்டர்கள் பங்கேற்றனர். எம்.பி.க்கள் தயாநிதி மாறன், ஆ.ராசா, அமைச்சர்கள் நேரு, சேகர்பாபு பங்கேற்றனர்.

அமைதிப் பேரணியாக சென்று மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அவரைத்தொடர்ந்து அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எம்.பி.க்கள் தயாநிதி மாறன், ஆ.ராசா மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்பு கலைஞர் நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

### எடப்பாடி பழனிசாமி


அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அண்ணா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செய்தார்.

அண்ணா நினைவிடத்தில் தலைமை கழக நிர்வாகிகள் அ.தி.மு.க.வின் பல்வேறு அணிகளை சேர்ந்த மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்டோரும் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

எடப்பாடி பழனிசாமி அஞ்சலி செலுத்த வந்தபோது திரண்டு இருந்த அ.தி.மு.க. தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் வருங்கால முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி என்று வாழ்த்து கோஷங்களை எழுப்பினார்கள்.

## மகேந்திரகிரி இஸ்ரோ ஆய்வு மையத்தில் மீத்தேன் என்ஜின் சோதனை வெற்றி

**நெல்லை,பிப்.4:**



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) உள்நாடு மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு செலுத்துகிறது. இதற்குதுருவ செயற்கைக்கோள் ஏவுதள ராக்கெட் (பி.எஸ்.எல்.வி.), புவி ஒத்திசைவான செயற்கைக்கோள் ஏவுதள ராக்கெட் (ஜி.எஸ்.எல்.வி.), புவி ஒத்திசைவானசெயற்கைக்கோள் ஏவுதள ராக்கெட் மார்க்-3 (எல்.வி.எம்-3) மற்றும் சிறிய செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ பயன்படும் ராக்கெட் (எஸ்.எஸ்.எல்.வி.) என 4 ரக ராக்கெட்டுகளை பயன்படுத்துகிறது.

இதில் 4 வகைகளை கொண்ட பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டில் சுற்றுப்பாதையின் அடிப்படையில் செயற்கைக்கோள்களின் எடைகள் மாறுபடுகிறது. பூமி கண்காணிப்பு, புவி நிலையான மற்றும் வழிசெலுத்தல் ஆகிய 3 வகையான செயற்கைக்கோள்களை ஏவுவதற்கு பயன்படுத்தப்படும். அத்துடன் பல்துறை ஏவுதள ராக்கெட்டாகவும் செயல்படுகிறது.

உள்நாட்டு கிரையோஜெனிக் மேல்நிலையுடன் கூடிய ஜி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட் மூலம் 2 டன் வரை தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ முடியும். எல்.வி.எம்.3 என்பது அடுத்த தலைமுறை ஏவுதள ராக்கெட்டாகும்.

இது 4 டன் எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களையும், பூமியின் தாழ்வான சுற்றுப்பாதைக்கு 10 டன் வரை எடை கொண்ட செயற்கைக்கோளையும் ஏவும் திறன் கொண்டது. இந்த ராக்கெட் சி-25 கிரையோ நிலை உள்பட முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டது.

இந்தநிலையில், இஸ்ரோ அதன் அடுத்த தலைமுறை ராக்கெட்டுக்கான எல்.ஓ.எக்ஸ்-மீத்தேன் என்ஜினின் முதல் சூடான சோதனை நெல்லை மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ ஆய்வு மையத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இது அடுத்த தலைமுறை ராக்கெட்டுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இருக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## இந்தியாவுக்கான இறக்குமதி வரி 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதம் ஆக குறைப்பு: டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன்,பிப்.4:**

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதில் இருந்து அரசு நிர்வாகத்தில் பல மாற்றங்களை செய்து வந்த டொனால்டு டிரம்ப், உலக பொருளாதாரத்தில் 2-ம் இடத்தில் உள்ள சீனாவுக்கு அதிக வரிகளை விதித்து உத்தரவிட்டார். கனடா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கும் கடந்த ஆண்டில் கூடுதல் வரி விதிக்கப்பட்டது.

இந்நிலையில், உக்ரைன் போரை தடுத்து நிறுத்தும் நோக்கில், ரஷியாவுக்கு பைடன் அரசின்போது அமெரிக்கா தடைகளை விதித்து வந்தது. இந்த நிலையில், டிரம்ப் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கான வரி விதிப்பு அதிகரித்தது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு மிக உயரிய மதிப்பளித்தவர் பிரதமர் மோடி: மத்திய மந்திரி சோனோவால்

ரஷிய எண்ணெய்யை இந்தியா வாங்குகிறது. அதனால், போர் தளவாடங்கள் வாங்க நிதியை ரஷியா பயன்படுத்தி கொள்கிறது என குற்றம் சாட்டி இந்தியாவுக்கான வரியை அமெரிக்கா அதிகரித்தது. இந்நிலையில், அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே வரி குறைப்புக்கான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்தது. அதில், வரியை குறைப்பது தொடர்பான அறிவிப்பும் இருக்கும் என கூறப்பட்டது.

இந்த சூழலில், பிரதமர் மோடியை அமெரிக்க அதிபர் டிரம்ப் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு இன்றிரவு பேசியுள்ளார். இதனை இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் உறுதிப்படுத்தி உள்ளார்.



இதன்படி, இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்பட்டு உள்ளது என டிரம்ப் அறிவித்து உள்ளார். இதன் தொடர்ச்சியாக, இந்தியாவுக்கான இறக்குமதி வரி 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு உள்ளது என்றும் டிரம்ப் தெரிவித்து உள்ளார்.

ரஷியாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கு பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்து உள்ளார் என்றும் ரஷியாவுக்கு பதிலாக வெனிசுலாவிடம் இருந்து எண்ணெய்யை வாங்க இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது என்றும் அறிவித்துள்ள டிரம்ப், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு வலிமையாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்களை வாங்க இந்தியா திட்டமிட்டு உள்ளது என்றும் கூறப்படுகிறது. இதேபோன்று, அமெரிக்க பொருட்கள் மீது விதிக்கப்படும் வரியை பூஜ்ஜியமாக குறைக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் டிரம்ப் வலியுறுத்தி உள்ளார் என தகவல் தெரிவிக்கின்றது.

## "இந்திய அமெரிக்க வர்த்தகம் இனி மென்மேலும் பூத்துக் குலுங்கும்"- உள்துறை மந்திரி அமித்ஷா

**புதுடெல்லி,பிப்.4:**

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்பட்டு உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்து உள்ளார். இதன் தொடர்ச்சியாக, இந்தியாவுக்கான இறக்குமதி வரி 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்து உள்ளார். இதற்கு இந்திய தரப்பில் இருந்து பெரும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

ரஷியாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கு பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்து உள்ளார் என்றும் ரஷியாவுக்கு பதிலாக வெனிசுலாவிடம் இருந்து எண்ணெய்யை வாங்க இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது என்றும் அறிவித்துள்ள டிரம்ப், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு வலிமையாக உள்ளது என்றும் கூறினார்.

இந்நிலையில், "இந்த வரலாற்று சிறப்பு மிக்க இந்த வர்த்தக ஒப்பத்தத்துக்காக பிரதமர் மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு வாழ்த்துக்கள். இரு நாட்டு மக்களுக்கும் இது நன்மை தரும். இந்திய அமெரிக்க வர்த்தகம் இனி மென்மேலும் பூத்துக் குலுங்கும்" என்று தெரிவித்திருக்கிறார்.

## சோளிங்கர் அருகே கல்லூரி பஸ்-லாரி மோதி விபத்து: மாணவிகள் உள்பட 20 பேர் படுகாயம்



**ராணிப்பேட்டை,பிப்.4:**

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காட்டில் தனியார் கல்லூரி இயங்கி வருகிறது. இந்த கல்லூரி பஸ் இன்று காலை 20-க்கும் மேற்பட்ட மாணவிகளுடன் சோளிங்கர்-வாலாஜா சாலையில் வந்தது.

பெருங்காஞ்சி ஏரிக்கரை பகுதியில் வந்தபோது எதிரே வந்த தனியார் நிறுவனத்தின் லாரி கட்டுப்பாட்டை இழந்து கல்லூரி பஸ் மீது நேருக்கு நேர் மோதியது.

இதில் கல்லூரி பஸ்சில் வந்த மாணவிகள், 2 டிரைவர்கள் உள்பட 20-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த கொண்டபாளையம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கிருந்த பொதுமக்கள் உதவியுடன் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு சோளிங்கர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## தென்பெண்ணை நீர் பங்கீட்டு பிரச்சினை: நடுவர் மன்றத்தை ஒரு மாதத்துக்குள் அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி / சென்னை,பிப்.4:**

கர்நாடகத்துடன் தென்பெண்ணை நீர் பங்கீடு பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தை அமைக்கவும், நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைக்கும் வரை, மார்க்கண்டேயா நதியின் குறுக்கே அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தடைவிதிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு மனுத்தாக்கல் செய்திருந்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், என்.வி. அஞ்சரியா அடங்கிய அமர்வு கடந்த நவ.19-ம் தேதி விசாரித்தது. இந்த விவகாரத்தில் அமைக்கப்பட்ட மத்தியஸ்த குழு மூன்று முறை ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை. எனவே, தென்பெண்ணை நீர் பிரச்சினையை தீர்க்க நடுவர் மன்றத்தை அமைப்பதே தீர்வாகும் என தமிழகத்தின் சார்பில் வாதிடப்பட்டது.

இதற்கு கர்நாடக அரசின் சார்பில் ஆட்சேபம் தெரிவித்து, மத்திய அரசுக்கு மேலும் ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது. இந்த விவகாரத்தில் மத்திய நீர்வளத் துறையின் சார்பில் ஏற்கெனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், 'நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு கூறுகிறது. பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என்று கர்நாடக அரசு கூறுகிறது' என வாதிடப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட உச்ச நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில், "தென்பெண்ணை நீர்பங்கீடு பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தை ஒரு மாதத்துக்குள் அமைத்து, அது குறித்த ஆணை அரசிதழில் வெளியிட வேண்டும்" என்று உத்தரவிட்டது.

அமைச்சர் துரைமுருகன் அறிக்கை: இந்நிலையில், தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெண்ணையாறு மற்றும் அதன் கிளை நதியான மார் கண்டேயா நதி 1892-ம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்துக்கு உட்பட்ட நதி என்பதால், கர்நாடக அரசு அதன் குறுக்கே கட்டுமானங்களை மேற்கொள்ள தமிழகத்தின் இசைவை பெற வேண்டும்.

ஆனால் தன்னிச்சையாக கர்நாடக அரசு மார்கண் டேயா நதி குறுக்கேஎர்கோல்கிராமத்தில், பங்காரப்பேட்டை தாலுகாவில் கட்டும் அணையையும் மற்றும் பெண்ணையாற்றிலிருந்து சில நீரேற்றும் திட்டங்களை செயல்படுத்துவதை தடுக்க ஆணையிடுமாறும் உச்ச நீதிமன்றத்தில் 2018, மே 18-ம் தேதி தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது இதில் உச்ச நீதிமன்றம் 2019 நவ.14-ம் தேதி நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

ஆனால், மத்திய ஜல்சக்தி அமைச்சகம், ஓர் ஒப்பந்தப் பேச்சு வார்த்தைக் குழுவை 2020 ஜனவரியில் அமைத்தது.



இக்குழு 2020 ஜூலை 31-ம் தேதி தனது இறுதி அறிக்கையில், நடுவர் மன்றத்தை ஜல்சக்தி அமைச்சகம் அமைக்கலாம் என பரிந்துரைத்தது.

ஆனால், மத்திய அரசு நடுவர்மன்றம் அமைப்பதை தாமதித்து வந்தது. இந்நிலையில், இந்த அரசு பதவி ஏற்றதும், மத்திய நீர் வளத்துறை அமைச்சரை கடந்த 2021 ஜூலை 6-ம் தேதி நேரில் சந்தித்து இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்ககேட்டுக்கொண்டேன்.

இதன் தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு கடிதங்கள் வாயிலாகவும் நடுவர் மன்றம் அமைக்க கோரப்பட்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், மத்திய அரசு, நடுவர் மன்றம் அமைப்பதை எந்த முகாந்திரமும் இல்லாமல் தாமதப்படுத்தியது.

அதோடல்லாமல் உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை குழு அமைக்க கேட்டுக்கொண்டது. உச்ச நீதிமன்றத்தின் 2024 ஜன.23-ம் தேதி உத்தரவின்படி, 2-வது பேச்சுவார்த்தைக் குழுவை, ஜல்சக்தி அமைச்சகம் பிப்.7-ம் தேதி அமைத்தது. இச்சூழலில் மீண்டும் மத்திய நீர்வளத்துறை அமைச்சரை 2024 ஜூலை 25-ம் தேதி சந்தித்து நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தினேன்.

இரண்டாவது பேச்சுவார்த்தைக் குழு, பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை என்பதை தனது இறுதி அறிக்கையில் அதே ஆண்டு நவ.30-ம் தேதி சமர்ப்பித்தது. மத்திய அரசு நடுவர் மன்றம் அமைப்பதை மேலும் தாமதித்து வந்ததால் கடந்த 2025 செப். 8-ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் அசல் வழக்கினை விரைவில் விசாரிக்க கோரப்பட்டது.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் பிப்.2-ம் தேதி (நேற்று) அளித்த தீர்ப்பில், பெண்ணையாறு பிரச்சினையை தீர்ப்பதற்காக, ஒருமாத காலத்துக்குள் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை நிறைவேற்றும் வகையில் மத்திய அரசு நடுவர் மன்றத்தை உடனடியாக அமைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலும், தமிழக அரசு தொடர்ந்து அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து விரைவில் பெண்ணையாறு மற்றும் மார்கண்டேயா நதிநீரை பெற்று, குடிநீர் மற்றும் வேளாண்மை தேவைகளுக்காக நம்பியுள்ள மக்களின் நலன்களை பாதுகாக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 1500 பெண்கள் கைகளில் வேலுடன் வேல்மாறல் பூஜை






**பொள்ளாச்சி, பிப்.04:**


பொள்ளாச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் காலையில் K.K.G. மஹாலில் நடைபெற உள்ள வேல் மாறல் பூஜைக்கு செல்லும் பொழுது நம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வணங்கி ஆலயம் சுற்றி சென்றார்கள். வேல்மாறல் பூஜைக்கு 1500 பெண்கள் கைகளில் வேலுடன் வேல்மாறல் பூஜைக்கு சென்றார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# USA - கலிபோர்னியாவில் நம் வாசவி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகம்







**கலிபோர்னியா, பிப்.04:**

கலிபோர்னியாவில் நம் வாசவி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகம் USA - கலிபோர்னியாவில் அமைந்திருக்கும் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகம் சிறப்பு அபிஷேகங்கள், தாமரை பூக்கள் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, கோபுர கலசத்தில் புனித நீர் வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடைபெற்றது.

அனைவருக்கும் கலசம் புனித நீர் தெளிக்கப்பட்டது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீவாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசிமண்டலத்திருவிழா



**மதுரை, பிப்.04:**

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசிமண்டலத்திருவிழா 2026-03.02.2026 கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆதியந்தமாயினாய் ஆலவாயில் அண்ணலே சோதியந்தமாயினாய் சோதியுள்ளொர் சோதியாய் கீதம் வந்த வாய்மையால் கிளர்தருக்கினார்க்கல்லால் ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்கலாகுமே எம்பிரான் திருஞானசம்பந்தர்பெருமான்.

**சொக்கே நின் தாளே துணை**

# மண்டபத்தில் முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் தேர்வு



**மண்டபம், பிப். 04:**

மண்டபத்தில் முன்னாள் அரசு பள்ளி மாணவர்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் 1985-ம் ஆண்டுமுதல் 1992-ம் ஆண்டு வரையில் பயின்ற மாணவர்கள் இணைந்து மாணவர்கள் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த கூட்டமைப்பின் கூட்டம் மண்டபம் வடக்கு கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் ரெசார்ட்டில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்வு செய்வது பற்றி கலந்து ஆலோசனை செய்யப்பட்டு, கூட்டமைப்பின் தலைவராக தில்லைராஜன், துணைத் தலைவராக முனைவர் ஜெயக்குமார், செயலாளராக முஜிபுர் ரஹ்மான், துணை செயலாளராக ஜான் அப்துல்காதர், பொருளாளராக சூரியநாராயண மூர்த்தி, இணை பொருளாளராக செய்யது காசிம் ஆகியோரும், சட்ட ஆலோசகர்களாக ஜெகதீஸ்வரன், சரவணன் ஆகியோரும், கௌரவ ஆலோசகர்களாக பூபதி ரஜினிகாந்த், முருகேசன், சதக்கா, சீனி முகம்மது, சண்முகநாதன் மற்றும் செய்யது உசேன் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும் செயற்குழு உறுப்பினர்களாக அசன் முகைதீன், அபுல் ஹசன், சீனிகாதர் முகைதீன், புரோஸ் கான் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

பொதுக் குழு மற்றும் அயலக குழு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் கூட்டத்தில் மண்டபம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு பயின்று வரும் ஏழை மாணவ மாணவியர்களின் உயர் கல்விக்கான விண்ணப்ப கட்டணங்களை செலுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

பொது தேர்வு எழுதும் மாணவர்களின் தேர்வு பயத்தை போக்கவும், 12-ம் வகுப்பிற்கு பின் என்ன படிக்கலாம் என்பதை கல்வி நிபுணர்களைக் கொண்டு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஜன 29-ம் தேதி மண்டபம் முகாம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முன்னாள் மாணவர்களின் முதல் சந்திப்பு, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கௌரவுக்கப்பட்டது. அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்றுவரும் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது மற்றும் மரக்கன்றுகள் நடப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் வரும் காலங்களில் ஆண்டு தோறும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

சில முன்னாள் மாணவர் களின் கோரிக்கையை ஏற்று 1985-ம் ஆண்டு முதல் 1992-ம் ஆண்டு வரை இருந்து வரும் முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பை 1985-ம் ஆண்டு முதல் 2000-ம் ஆண்டு மாணவர்கள் வரையில் சேர்த்து செயல்பட முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் கூட்டமைப்பின் தலைவர் தில்லைராஜன் நன்றி கூறினார்.

# 41 பேரை காப்பாற்ற முடியாத விஜய் 7 கோடி மக்களை எவ்வாறு காப்பாற்றுவார்? - அமைச்சர் பெரியசாமி

**திண்டுக்கல், பிப்.04:**

திண்டுக்கல்லில் பேரறிஞர் அண்ணா நினைவுதினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன் பின்னர் அமைச்சர் இ.பெரியசாமி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றிபெற்று மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக மீண்டும் அமர்வார். பனையூரில் இருந்து அரசியல் செய்யும் விஜய் வெளியே வர வேண்டும். இந்த அரசியல் வெகு நாட்களுக்கு எடுபடாது. சினிமா ரசிகர்களுக்கு மத்தியில் அரசியல் செய்ய முடியாது. எல்லா அரசியலையும் பார்த்து விட்டோம். இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் உள்ளார். தி.மு.க.வுக்கு 70 சதவீத மக்கள் ஆதரவு உள்ளது. திருக்குறளை மாற்றிக்கூறி விமர்சனம் செய்வதை ஏற்க முடியாது.

அரசியல் ரீதியாக விமர்சனம் செய்தால் நாங்களும் விமர்சனம் செய்வோம். தி.மு.க.வை முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி வளர்த்ததைப் போல தற்போது மு.க.ஸ்டாலினும் வளர்த்து வருகிறார். எங்களை பொறுத்தவரை விஜய் அரசியல்வாதியே கிடையாது. அவரை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள்.



கரூரில் 41 பேர் கூட்ட நெரிசலில் தண்ணீர் இல்லாமல் இறந்து விட்டனர். அவர்கள் துக்கத்தில் கலந்துகொள்ள மனமில்லை. இவர் எவ்வாறு 7 கோடி மக்களை காப்பாற்றுவார்? ஏதோ நடித்துப்பார்க்கிறார். டான்ஸ் ஆடிப்பார்க்கிறார். இந்த டான்ஸ், டப்பாங்குத்து நம்ம ஊரிலும் ஆடலாம். இது எப்படி அரசியல் தலைவருக்கு அழகாகும்.

கூட்டணி கட்சிகள் கூடுதல் தொகுதிகள் கேட்பது அவர்களின் உரிமை. வெற்றி வாய்ப்பை பொறுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொகுதிகளை ஜனநாயக ரீதியில் வழங்குவார்.

கனிமொழி எம்.பி. ராகுல் காந்தியிடம் கெஞ்சுவதாக எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். நாங்கள் பல ஆண்டுகளாக ஒரே அணியில் நீடித்து வருகிறோம். இந்த கூட்டணிதான் வருகிற தேர்தலில் மாபெரும் வெற்றி பெறப் போகிறது. சட்டமன்ற தேர்தலைத் தொடர்ந்து நடைபெறும் பஞ்சாயத்து தேர்தல், பாராளுமன்ற தேர்தல் ஆகிய அனைத்திலும் தி.மு.க. கூட்டணியே வெற்றிபெறும். 4 ஆண்டுகளாக எடப்பாடி பழனிசாமி எங்கே சென்றார் என தெரியவில்லை. தற்போதுதான் அவர் மக்களை சந்தித்து வருகிறார். ஆனால் மக்கள் அவரை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஓ.பன்னீர்செல்வம் தி.மு.க.வில் இணைவாரா என்பது குறித்து எனக்கு தெரியாது. அவர் தி.மு.க.வுக்கு வந்தால் மு.க.ஸ்டாலின் முடிவு செய்வார். அண்ணாமலை திடீர் திடீர் என ஏதாவது ஒரு கருத்தை வெளியிடுவார். தற்போது பழனியில் மக்களை திரட்டி ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக கூறியுள்ளார். பழனிக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# பத்மஸ்ரீ விருது பெற்ற கோத்தகிரி ஓவியரின் மகள் மீண்டும் கல்லூரியில் சேர்ந்தார்

**ஊட்டி, பிப்.04:**

நீலகிரி மாவட்டம் கீழ்கோத்தகிரியை சேர்ந்த ஆலு குறும்பா பழங்குடி ஓவியர் கிருஷ்ணனுக்கு மத்திய அரசு சமீபத்தில் பத்மஸ்ரீ விருது அறிவித்து பெருமைப்படுத்தியது.

இவர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் மரணம் அடைந்தார். இதனால் அவரது மனைவி சுசீலா மேட்டுப்பாளையம் பாக்கு தோப்பில் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார்.

கிருஷ்ணன்-சுசீலா தம்பதியின் மூத்த மகள் வாசுகி, தந்தை இறப்புக்கு பிறகு கல்வி கட்டணம் செலுத்த வழியின்றி படிப்பை பாதியில் நிறுத்தி விட்டார். இதுகுறித்த செய்தி பத்திரிகையில் வெளியானது.

இதுகுறித்து தகவலறிந்த மத்திய மந்திரி எல்.முருகன் உடனடியாக பத்மஸ்ரீ விருது பெற்ற ஓவியர் கிருஷ்ணன் குடும்பத்தினரை செல்போனில் தொடர்புகொண்டு பேசினார். மேலும் வாசுகி மீண்டும் கல்லூரியில் படிப்பை தொடர நடவடிக்கைமேற்கொள்ளும்படி



நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீருவிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து கலெக்டர் அறிவுரையின்பேரில் நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ் பத்மஸ்ரீ விருது பெற்ற ஓவியர் குடும்பத்தினரை நேரில் சந்தித்து பேசினார். தொடர்ந்து வாசுகி ஊட்டி ஜெ.எஸ்.எஸ் பார்மசி கல்லூரியில் சேர்ந்து படிப்பை தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அவர் நேற்று கல்லூரியில் சேர்ந்து மீண்டும் டி.பார்ம் படிப்பை தொடங்கி உள்ளார்.

இதுகுறித்து வாசுகியின் தாயார் சுசீலா கூறியதாவது:-

"எனது மகள் படிக்க நடவடிக்கை எடுக்க உதவிய பத்திரிகைகள், மத்திய மந்திரி எல்.முருகன் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி. எனது மகள் முழுமையாக படிக்க அனைத்து உதவிகளையும் செய்தால் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் எங்களுக்கு 3 குழந்தைகள் உள்ளன. அவர்களின் கல்விக்கான உதவி மற்றும் நாங்கள் குடியிருக்க அரசு சார்பில் கோத்தகிரியில் ஒரு வீடும் கட்டி கொடுத்தால் மிகுந்த உதவியாக இருக்கும்" என்று கோரிக்கை விடுத்து உள்ளார்.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் 14 வது அமைப்பு தின கொடியேற்றம்



**மதுரை, பிப்.04:**

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் 14 வது அமைப்பு தின கொடியேற்றம் மாவட்ட தலைவர் மு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்தார் மாவட்ட செயலாளர் அ.பால்முருகன் வரவேற்புரையாற்றினார் சங்கத்தின் மாநில செயலாளர் முனைவர் சகிருஷ்ணன் அமைப்பு தின சிறப்புரையாற்றினார். மாவட்ட நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் தோழமை சங்கத்தின் நிர்வாகிகள் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் மாவட்ட பொருளாளர் கி.நாராயணன் நன்றி கூறினார்

# பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினம்



**திருப்பத்தூர், பிப்.04:**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் நகர திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு வாணியம்பாடி நகர திமுக செயலாளர் வி.எஸ். சாரதிகுமார் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்தநிகழ்ச்சியில் வாணியம் பாடி நகர மன்ற தலைவர் உமாபாய் சிவாஜி கணேசன், திமுக கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தூய்மை பணியாளர் பத்மாவை வீட்டிற்கு அழைத்து நேரில் தங்க செயின் பரிசளித்த ரஜினி




சென்னை தியாகராய நகர் வண்டிக்காரன் சாலையில் பத்மா என்ற தூய்மையாளர் கடந்த 11-ந்தேதி தூய்மை பணியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது குப்பையோடு கிடந்த கவர் ஒன்றில் இருந்த 45 சவரன் தங்க நகைகளை கண்டெடுத்தார். இதை அடுத்து அந்த தங்க நகைகளை பாண்டிபஜார் காவல்நிலையில் ஒப்படைத்தார்.இந்த நிலையில், நடிகர் ரஜினிகாந்த், பத்மாவை நேரில் அழைத்து பாராட்டினார். பத்மாவின் செயலை பாராட்டிய ரஜினிகாந்த் அவருக்கு பொன்னாடை போர்த்தி தங்க செயினை பரிசாக அளித்தார். மேலும் பத்மாவுடன் கலந்துரையாடினார். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# எனது தலைமையில் ஆட்சி அமையும்: தனிக்கட்சி தொடங்க திட்டமா?- சசிகலா பரபரப்பு பேட்டி



**சென்னை, பிப்.04:**

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் சசிகலா நேற்று அஞ்சலி செலுத்தினார். அப்போது அவரது ஆதரவாளர்கள் துரோகிகளையும் எதிரிகளையும் வீழ்த்தி சசிகலா தலைமையில் ஆட்சி அமைப்போம் என்று உறுதிமொழி எடுத்தனர்.

இது தொடர்பாகவும் சட்டமன்றத் தேர்தலை தனிக்கட்சி தொடங்கி சந்திக்க போகிறீர்களா? என்பது பற்றி நிருபர்கள் அவரிடம் சரமாரியாக கேள்வி எழுப்பினார்கள். இதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:-

எதிரிகள் யார் துரோகிகள் யார் என்பது தமிழக மக்களுக்கு தெரியும். இது பற்றி நான் தெளிவாக சொல்ல வேண்டியதில்லை. வருகிற சட்டமன்றத்தேர்தலில் எனது தலைமையில் நிச்சயம் அம்மா ஆட்சியை அமைப்போம். அது எப்படி நடக்கும் என்பதை நீங்களே விரைவில் தெரிந்து கொள்வீர்கள் என்றார்.

இதனிடையே அ.தி.மு.க.வை ஊழல் கட்சி என்று நடிகர் விஜய் விமர்சித்துள்ளாரே என்பது பற்றிய கேள்விக்கு பதில் அளித்த சசிகலா, அ.தி.மு.க. ஆட்சி எப்படி இருந்தது என்று அனைவருக்கும் தெரியும். ஒவ்வொரு குடும்பத்தினரும் தமிழக மக்களும் அம்மாவின் ஆட்சி எப்படி இருந்தது என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவேதான் இப்போதும் அம்மா ஆட்சி மீண்டும் மலரும் என்று அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்றார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் டி.டி.வி. தினகரன் இணைந்திருப்பது பற்றிய கேள்விக்கு பதில் அளித்த சசிகலா, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு முடிவு இருக்கும். அதன் அடிப்படையில் அவர்கள் செயல்பட்டு இருப்பார்கள். அது பற்றி எல்லாம் எப்படி கருத்து தெரிவிக்க முடியும் என்றார்.


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009



# கவிதை அரங்கம்!




நீங்கள் முடிந்த பின்
உங்கள் கனவுகள்
மட்டுமே உங்கள்
வாழ்க்கையை உயர்த்தும்

நான் எடுக்கும் முடிவு
சரியானதா என்று
எனக்குத் தெரியாது
ஆனால் எடுத்த முடிவை
நான் சரியாக்குவேன்

எதிர்காலம் என்பது நம்மை
ஏளனமாக பேசும்
சிலருக்கு
நம்மை நிரூபித்துக் காட்ட
இறைவன் கொடுத்த
பொற்காலம் ஆகும்

உணர்ச்சிக்கு முதலிடம்
கொடுக்காமல்
உழைப்புக்கு
முதலிடம் கொடுத்தால்
உன்னதமாக இருக்கும்

## வாழ்க்கை தத்துவம்...



நீ நடந்த பாதையில்
தடைகள் இருந்தால்
அது வாழ்ந்ததை நிரூபிக்கிறது

சோகமான தருணங்கள் தற்காலிகம்
ஆனால் அவற்றை
கடந்து செல்வதே
நம் உண்மையான சாதனை

தோல்வி தள்ளி விடலாம்
ஆனால் மனதை தள்ள விடாதே

துன்பங்கள் தடையாக இல்லை
வழிகாட்டியாக செயல்படும் போது
வாழ்க்கை அர்த்தமடைகிறது

உழைப்பின் சத்தம்
இல்லையென்றால்
வெற்றியின் ஒலி இருக்காது

# ஆடலரசி அழகப்பன்

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தாமதமாகத் தூக்கத்திலிருந்து எழுந்தான் அழகப்பன். வழக்கமான நடைப் பயிற்சியை முடித்துவிட்டு இளைப்பாற புங்க மரத்தின் கீழ் உட்கார்ந்து மேல் சட்டைப் பாக்கெட்டிலிருந்து கைபேசியை எடுத்துப் புலனத்தைத் பார்த்தான். வரிசையாய் வந்திருந்தப் புலனச் செய்தியிலிருந்து ஆடலரசியிடமிருந்து வந்த செய்தியைப் படித்தான். " நாம் முதன்முதலில் சந்தித்த இடத்தில், நாளை மீண்டும் சந்திப்போம். கடைசியாக, கண்ணியமிக்கக் காதலராக, வழக்கமான நேரத்தில்" இப்படிக்கு ஆடலரசியெனச் சுருக்கமாக இருந்தது.

ஆடலரசி சந்தித்தபோது, மென்மையாய் சிரித்த சிரிப்பின் வழியே மலர்ந்த காதல், தொடர்ந்து நாகரீகமான உரையாடல்கள், அவரவர் பாதையில் இலக்கை நோக்கியப் பயணம் என்று வருடங்கள் கடந்து போனதே தெரியாமல் இன்றோடு ஐந்து வருடங்கள் முடிகிறது.

ஒருவரை ஒருவர் நேசித்து, புரிந்து ஒரு முடிவுக்கு வரும் வேளையில், ஆடலரசியின் தந்தையின் எதிர்ப்பு முழுவீச்சில் தெரிந்ததும், அதற்கு வளைந்து கொடுக்காமல் உறுதியாய் "இல்லப்பா, நான் எடுத்த முடிவுல உறுதியா இருக்கேன். அழகப்பன தவிர வேற யாரையும் கட்டிக்கமாட்டேன்" என்று தன் அப்பாவிடம் சொல்லிவிட்டதாய் நம்பிக்கையோடு சொன்ன ஆடலரசியின் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்தான் அழகப்பன்.

தன் மகளின் தேர்வு சரியானதுதானா என்று பார்ப்பதற்காகக் கடந்த வாரம் இதே தேநீர் கடையில் என்னைப் பற்றி முழுமையான தகவல்களைத் தெரிந்துகொள்ளவும், குணத்தோடு உடல் மொழியினையும் புரிந்து கொள்ளவும், ஆடலரசியின் அப்ப அமைதியாய் தேநீரை உறிஞ்சியவாறு கேள்வியால் துளைத்து எடுத்தபோது, அசராமல் பதில் கூறிய தைரியத்தை பார்த்துச் சிரித்த ஆடலரசியிடமிருந்து இப்படிப்பட்ட ஒரு குறுஞ்செய்தி வந்ததை நினைத்துச் சற்று கலக்கமடைந்தாலும், அமைதியாய் முகத்தில் வழிந்த வியர்வைத் துளிகளை இடது கையினால் துடைத்துத் தெளித்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

கனத்த மனதோடு நடந்தவனின் நினைவுகளில் ஆடலரசியோடு உரையாடும்போது தெறித்து விழுந்த சூடான சொற்களில், சில சுவைக் குறைத்து சொன்னபோது, வாடிய முகத்தோடு ஆடலரசியின் முகத்தையே பார்த்திருந்த தருணங்களை நினைத்துக் கொண்டான்.

"என்னுடையக் காதல எதிர்க்கிறது எந்த விதத்தில் நியாயம்?| என்று கேட்டேன். அதற்கு எங்க அம்மா சொன்னது "நான் கூடாதுன்னு சொல்லல, காதலன் நல்லவனா பண்பானவனா, நல்ல பழக்க வழக்கம் உள்ளவனை நீ தேர்ந்தெடுத்தியான்னு நாங்க பாக்கணும். அது எங்களோட கடமைன்னு" சொன்னதாகச் சொன்னவளின் அடுத்த சொற்கள், "என்னுடைய தேர்வு சரியா இருந்தது. அதனாலதான், எங்களுடைய வாழ்க்கைப் பயணம் அழகா இருக்கு. நீ தேர்ந்தெடுத்தவன் எப்படிப்பட்டவன்னு, நாங்க தெரிஞ்சுக்கணும். உடுத்தும் ஆடை, உடல் மொழி மட்டுமே ஒருவருடைய செயலைத் தீர்மானிக்காது. அன்றாடம் பழகும்போது வெளிப்படும் பழக்க வழக்கங்கள்தான் அவன் நல்லவனாகக் கெட்டவனா என்பதை தீர்மானிக்கும். அப்பாவோட பழகுன பழக்கம் எனக்கு நம்பிக்கைக் கொடுத்தது. அதனால நான் உறுதியாக முடிவெடுத்தன்." என்ற தொடர்ந்து பேசியதை அவள் சொல்ல, அதனை நினைத்துக்கொண்டே நடந்தான்.

அமைதியாக வீட்டிற்குள் நுழைந்தான். கைபேசியில் அழைப்பில் ஆடலரசியென இருந்ததும் "சொல்லுங்க..." மறுமுனையில் "தம்பி நான் ஆடலரசியோடு அம்மா பேசுறேன்" "வணக்கம் சொல்லுங்க "என்று மீண்டும் பதில் சொன்னான். "நீங்க எந்த நம்பிக்கையில என்னுடைய பொண்ண காதலிச்சிங்க" என நச்சென்று கேட்டதும், பதில் சொல்ல முடியாமல் தவித்த அழகப்பன், அப்படியே அமைதியானான். அவளே பேச்சைத் தொடர்ந்து "சரிங்க தம்பி, பதில ஆடலரசியிடம் சொல்லுங்க" என்று தன் மகளிடம் கைபேசியைக் கொடுத்தாள்.

"உங்க பதில் என்னன்னு சொல்லுங்க." என ஆடலரசியும் அவசரப்பட்டு, "உன்னப்பத்திய அனைத்து தகவலையும் அம்மாகிட்ட சொல்லிட்டேன். என்னுடைய விருப்பத்தையும் உறுதியையும் அவங்ககிட்ட சொல்லிட்டேன். ஆனா, அவங்க சொல்படிதான் என்னால நடக்க முடியும். நான் புலனச் செய்தியில் எழுதியது மாதிரி, நாளைக்கு காலையில, நாம முதன்முதல்ல சந்திச்ச இடத்தில காதலர்களா கடைசியா சந்திப்போம். மறக்காம வந்துடுங்க" என அழைப்பைத் துண்டித்தாள் ஆடலரசி.

அன்றைய நாள் என்றுமில்லாததுபோல் வேகமாகச் சென்றது. மறுநாள் திங்கட்கிழமை குளித்து உடை உடுத்தி, அம்மாவிடம் சொல்லிவிட்டு வேலைக்குப் புறப்பட்டான் அழகப்பன்.

"டேய் எந்த முடிவா இருந்தாலும் ஏத்துக்க. அதனால ஒன்னும் கெட்டிடமாட்ட. சரியா பழகியிருந்தா வருத்தப்படணும்னு அவசியமில்லை. என்று சொன்ன தாயின் நம்பிக்கையூட்டும் சொற்களை நெஞ்சில் சுமந்துகொண்டு, சாலையில் நடந்தான் அழகப்பன்.

இலக்கியா தேநீர் கடையினுள் நுழைந்தான்.

அடலரசியோடு அவளது பெற்றோறும் உட்கார்ந்திருந்தார்கள்.

"வணக்கம்..." என்றான்.

"உட்காருங்கள்..." என்ற ஆடலரசி "நாலு காபி" எனச் சொல்லி அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

இறுக்கமாக உட்கார்ந்திருந்தான் அழகப்பன்.

சூடான காபியை மேசையில் வைத்து விட்டுச் சென்றார் பரிமாறுபவர்.

"அம்மா, இங்கதான் நாங்க முதன்முதலா காபி குடிக்கும்போதுதான் சந்தித்தோம்" என்று சிரித்தபடிச் சொன்னாள் ஆடலரசி.

"அழகப்பன் என் பொண்ணோட வாழ்க்கை முக்கியம். நாங்க எடுத்த முடிவுக்கு ஒத்துக்கிட்டா. நீங்களும் உங்க குடும்பத்தோட வந்து, சம்மதிச்சு வாழ்த்தனும்"என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் ஆடலரசியின் தந்தை.

அவளது அம்மாவும் எழுந்து, இருவரும் "இந்தாங்க தம்பி... மறக்காம நிச்சயதார்த்தத்துக்கு வந்துருங்க" என மூடிய உரையைக் கொடுத்தார்கள்.

எழுந்து பெற்றுக்கொண்ட அழகப்பன், உள்ளிருந்த பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் படித்தான்.

"ஆடலரசி அழகப்பன்" என இருந்ததைப் பார்த்து முகம்மலர சிரித்தான்.

ஆடலரசியின் பெற்றோர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஆனந்தத்தில் மகிழ்ந்தனர்.

ஒற்றை ரோஜாப் பூவை அழகப்பனை நோக்கி நீட்டியபடி, வெட்கத்தால் மலர்ந்தால் ஆடலரசி.

**இரா.இரமேஷ்**
கயப்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும் வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"*



*மாணவர்: என்ன கடனா?*

# தினம் ஒரு சமையல்



## ஐவ்வரிசி வேர்க்கடலை கொழுக்கட்டை

தேவையான பொருட்கள்:

* மாவு ஜவ்வரிசி - 1 கப்
* வறுத்த வேர்க்கடலை - 1/2 கப்
* பச்சை மிளகாய் - 3
* இஞ்சி - சிறிய துண்டு
* சீரகம் - 1 டீஸ்பூன்
* கொத்தமல்லி - சிறிது
* உப்பு - சுவைக்கேற்ப
* துருவிய தேங்காய் - 1 கப்
* பச்சரிசி மாவு - 3 டேபிள் ஸ்பூன்
* தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை:



* முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் மாவு ஜவ்வரிசி மற்றும் வறுத்த வேர்க்கடலையை சேர்த்து நல்ல மணம் வரும் வரை வறுத்து இறக்கி குளிர வைக்க வேண்டும்.
* நன்கு குளிர்ந்த பின் வேர்க்கடலையின் தோலை நீக்கிவிட வேண்டும்.
* பின்பு சிறிய மிக்சர் ஜாரில் பச்சை மிளகாய், இஞ்சி, சீரகம் ஆகியவற்றை சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.
* பிறகு பெரிய மிக்சர் ஜாரில் வறுத்த ஜவ்வரிசி மற்றும் வேர்க்கடலையை சேர்த்து நன்கு மென்மையாக அரைத்து பொடித்துக் கொள்ள வேண்டும்.
* பின்னர் ஒரு பாத்திரத்தில் பொடித்த ஜவ்வரிசியை சேர்த்து, அத்துடன் அரைத்து வைத்துள்ள பச்சை மிளகாய் கலவையை சேர்க்க வேண்டும்.
* அதன் பின் பொடியாக நறுக்கிய கொத்தமல்லி, சுவைக்கேற்ப உப்பு, துருவிய 1 கப் தேங்காய், 3 டேபிள் ஸ்பூன் பச்சரிசி மாவு ஆகியவற்றை சேர்க்க வேண்டும்.
* பின்பு கொஞ்சம் கொஞ்சமாக நீரை தெளித்து, சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ள வேண்டும்.
* பின் கையில் எண்ணெய் தடவி, பிசைந்த மாவை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து உருளை வடிவில் பிடித்து, இட்லி தட்டில் வைக்க வேண்டும்.
* இறுதியாக அந்த இட்லி தட்டை இட்லி பாத்திரத்தினுள் வைத்து, 10 நிமிடம் வேக வைத்து எடுத்தால், சுவையான ஜவ்வரிசி வேர்க்கடலை கொழுக்கட்டை தயார்.

## பொடுதலை பயன்கள்



நீரிழிவு நோய்: நீரிழிவு நோயின் தாக்கம் உள்ளவர்களுக்கு பொடுதலை சிறந்த மருந்தாகிறது. பொடுதலையை சுத்தம் செய்து அதனுடன் பூண்டு, சின்ன வெங்காயம் சேர்த்து நெய் விட்டு வதக்கி சட்னி செய்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயின் தாக்கம் வெகுவாக குறையும்.

இருமல்: இருமல் பாதிப்புள்ளவர்கள் பொடுதலை இலையை சுத்தம் செய்து அதனுடன் பாசிப்பருப்பு கலந்து வேகவைத்து கூட்டு செய்து சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும்.

அக்கிப் புண்: உடல் சூட்டால் உடலில் சிறு சிறு கட்டிகள் தோன்றி கொப்புளங்களாக உருவாகும். இதனை அக்கி என்பர். இது உடலில் அதிக எரிச்சலை உண்டாக்கும். பாதிக்கப்பட்டவர்கள், பொடுதலையை நன்கு மைபோல் அரைத்து அக்கியின் கொப்புளங்கள் மீது தடவினால் எரிச்சல் நீங்குவதுடன் கொப்புளங்கள் உடைந்து புண்கள் விரைவில் ஆறும்


பொடுகு: பொடுதலையை அரைத்து தலையில் தேய்த்து ஊறவைத்து குளித்து வந்தால் பொடுகு நீங்கும்.

வெள்ளைப்படுதல்: பொடுதலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் காலையில் 1 தேக்கரண்டி பொடியுடன் தேன் கலந்து சாப்பிட்டு வரவேண்டும். அல்லது காலை, மாலை இருவேளையும் கஷாயம் செய்து சாப்பிட்டு வந்தால் வெள்ளைப்படுதல் குணமாகும்.

சிறுநீரக நீர்த்தாரைப்புண்: நூறு கிராம் பொடுதலை இலையை அரை டம்பளர் நீரிலிட்டுகாய்ச்சி கால்பாகம் சுண்டின பின் வடிகட்டி அதை இரண்டு பங்காக்கி காலை, மாலை குடித்து வர சிறுநீரிலுள்ள இனிப்பை மாற்றும். இக்கஷாயத்துடன் வால்மிளகு, சூரணம் சேர்த்து குடித்துவர சிறுநீரக நீர்த்தாரைப்புண் குணமாகும்.

சினிமா

# என் காதலன் என்னைவிட்டு விலகி போக காரணமே இதுதான்... மிருணாள் தாகூர் ஓபன் டாக்



மிருணாள் தாகூர், தமிழ் சினிமா இல்லை இந்திய சினிமா ரசிகர்கள் அதிகம் கவனிக்கும் நடிகைகளில் ஒருவர்.

இவர் சித்தாந்த் சதுர்வேதி ஜோடியாக தோ தீவானே ஷெஹர் மெய்ன் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படம் வரும் பிப்ரவரி 20ம் தேதி ரிலீஸ் ஆகவுள்ளது, இதனால் புரொமோஷன் வேலைகள் சூடு பிடிக்க நடந்து வருகிறது.

இப்பட புரொமோஷன் நிகழ்ச்சியில், கடந்த சில மாதங்களாக கிசுகிசுக்கப்படும் தகவல் குறித்து பேசியுள்ளார்.

தனுஷ்-மிருணாள் தாகூர் காதலிக்கிறார்கள் என கூறப்பட்ட செய்திக்கு நடிகை, தனுஷ் எனது சகோதரர் போல என கூறியுள்ளார். மேலும் தன்னை பிரிந்து சென்ற காதலர் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

நீ ஒரு நடிகை, அதை என்னால் ஏற்க முடியாது, இது செட்டாகாது என்று சொல்லி அவன் பிரேக்கப் செய்துவிட்டார்.

அவர் மிகவும் ஆர்தடாக்ஸ் குடும்பத்தை சேர்ந்தவர் என்றார். அவரின் வளர்ப்பு அப்படி என்பதால் அவரால் என் குணத்தை ஏற்க முடியாமல் போனது எனக்கு புரிந்தது. அவர் பிரிந்து சென்றது நன்மைக்கே என்றார் மிருணாள் தாகூர்.



அய்யனார் துணை சீரியலில் ஹோம்லி லுக்கில் நடித்து வரும் நடிகை மதுமிதா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் லேட்டஸ்ட்டாக பதிவிட்டுள்ள கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ரீ ரிலீஸாகியுள்ள மங்காத்தா படத்தின் இறுதி வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவாகி 2011ஆம் ஆண்டு வெளிவந்த படம் மங்காத்தா.

இப்படத்தில் அஜித்துடன் இணைந்து அர்ஜுன், திரிஷா, ஆண்ட்ரியா, ராய் லட்சுமி, பிரேம்ஜி, வைபவ், அஞ்சலி, மகத் என பலரும் நடித்திருந்தனர்.

பிளாக்பஸ்டர் வெற்றியடைந்த இப்படத்தை 15 ஆண்டுகள் கழித்து கடந்த ஜனவரி 23ஆம் தேதி ரீ ரிலீஸ் செய்தனர். ரசிகர்கள் இப்படத்தைத் திரையரங்கில் கொண்டாடினார்கள்.

இந்த நிலையில், ரீ ரிலீஸில் பட்டையை கிளப்பிய மங்காத்தா படத்தின் மொத்த வசூல் குறித்து விவரம் வெளியாகியுள்ளது. அதன்படி, ரீ ரிலீஸில் இப்படம் உலகளவில் ரூ. 21.5 கோடி வசூல் செய்துள்ளது.

# கொடி மர தத்துவம்

கோவிலில் வாயில்படி இருந்தால், அதை பெரும்பாலான பக்தர்கள் தொட்டு கும்பிடுவதை பார்த்து இருப்பீர்கள். வாயில் படியை ஏன் தொட்டுக் கும்பிட வேண்டும். இதில் அறிவியல் பூர்வமான ஒரு செயலை நம் முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள்.ஒரு பக்தன், கோவில் வாசல்படியை தொட குனியும் போது அது முதலில்அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பில் உள்ள சூரிய நாடியை இயக்குகிறது. படிக்கட்டை தொட்ட பிறகு வலது கை விரல்களை நம் நெற்றியில் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும்.இது நம்மிடம் உள்ள தீய சக்திகளை விரட்டும். அதோடு தெய்வ சன்னதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகளை மிக எளிதாக நமக்குள் கிரஹிக்க செய்யும். எனவே அடுத்த தடவை கோவிலுக்கு செல்லும் போது படிகளை வலது கையால் தொட்டு, உங்கள் புருவ மத்தியில் சற்று அழுத்தம் கொடுத்துப் பாருங்கள்.அது உங்களை புது மனிதனாக்கி, புத்துணர்ச்சியுடன் கோவிலுக்குள் செல்ல வைக்கும். உள்ளமும், உடலும் சிலிர்க்க நாம் அடுத்த காலடி எடுத்து வைத்ததும், நம் கண்களுக்கு கொடி மரம் தென்படும்.

கொடி மரம்:
ஆலய கொடி மரத்துக்கும் மிகப்பெரிய தத்துவங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் ஆலயங்களில் கொடி மரம் வைத்திருந்த பழக்கம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே வழக்கத்தில் இருந்ததற்கு பல உதாரணங்கள் உள்ளன. கோவிலில் திருவிழா தொடங்கும் சமயத்தில் கொடி ஏற்றம் நடந்ததை சங்க இலக்கியமான பட்டினப்பாலையில், மலர்மணி வாயில் பலர் தொழ கொடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காடுகளில் சில மரங்களில் கொடி சுற்றி படர்ந்து இருப்பதை பார்த்து இருப்பீர்கள். அதில் இருந்து தான் கொடிஏற்றும் பழக்கத்தை நம் முன்னோர்கள் உருவாக்கியதாக கருதப்படுகிறது. அது பல்வேறு நடைமுறைகளாக மாறி, இன்று துவஜஸ்தம்பம் என்று அழைக்கும் நிலை வரை வந்துள்ளது. நம் உடம்பில் உள்ள முதுகெலும்பு போன்றது கொடி மரம் என்று ஆகமங்கள் சொல்கின்றன. நம் முதுகுத் தண்டுவடத்தில் 32 எலும்பு வளையங்கள் உள்ளன. அது போலவே 32 வளையங்களுடன் கோவில் கொடி மரம் அமைக்கப்படுகிறது.நம் முதுகுத் தண்டில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களும், இடை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும் அமைந்துள்ளன. பொதுவாக இடை, பிங்கலை வழியாக செல்லும் பிராண வாயுவை, சுழிமுனை எனும் நடு நாடியில் நிறுத்தி இறைவனை தியானிக்க வேண்டும் என்பார்கள்.இதனால் மனம் ஒரு நிலைப்படும். இறைவன் வெளிப்படுவான். இந்த அடிப்படையில் தான் கொடி மரம் அமைக்கப்படுகிறது. கொடி மரம் ராஜகோபுரத்தை விட அதிக உயரமாக இருக்காது. அதே சமயத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும். அது போல கருவறையில் இருந்தும், ராஜகோபுரத்தில் இருந்தும் எவ்வளவு தூரத்தில், எவ்வளவு உயரத்தில் கொடி மரம் அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன.இது கோவிலுக்கு கோவில் மாறுபடும். ஆனால் பெரும்பாலும் கொடி மரத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பார்கள். இதன் அடிப்பகுதி அகலமாகவும், சதுரமாகவும் இருக்கும். இதற்கு சமபீடம் என்று பெயர். இந்த சதுர பாகம், படைப்பு தொழிலுக்கு உரியவரான பிரம்மாவையும், அதற்கு மேல் உள்ள எண்கோணப்பகுதியான விஷ்ணு பாகம் காத்தல் தொழிலுக்கு உரியவரான விஷ்ணுவையும், அதற்கு மேல் உள்ள நீண்ட ருத்ர பாகம், சம்ஹாரத் தொழிலை செய்யும் சிவபெருமானையும்குறிக்கும். அதாவது கொடி மரம் என்பது மும்மூர்த்திகளையும், அவர்கள் மேற்கொள்ளும் மூன்று தொழில்களையும் உணர்த்துகின்ற ஒரு அடையாளமாக திகழ்கிறது. இதன் மூலம் கோவிலில் நுழைந்த உடனேயே வாழ்வின் மூன்று முக்கிய அம்சங்கள் நமக்கு உணர்த்தப்பட்டு விடுகின்றன. கொடி மரம் முழுவதும் பல்வேறுஇறை உருவங்களை சிற்பங்களாக வடித்திருப்பார்கள்.கொடி மர உச்சியில் மூன்று பட்டைகள் போன்ற ஏர் பலகை இருக்கும். இதனை திருஷ்டிப் பலகை என்றும் சொல்வார்கள். இதில் சிறு, சிறு மணிகட்டி தொங்க விட்டிருப்பார்கள். அந்த கொடி கோவில் உள்நோக்கியபடி இருக்கும். சிலகோவில்களில் மூன்று பட்டைக்கு பதில் ஒரே ஒரு பட்டையே இடம் பெற்றிருக்கும். மணி தொங்க விட்டிருக்க மாட்டார்கள்.ஒவ்வொரு ஆலயத்துக்கு ஏற்ப இந்த அமைப்பு காணப்படும். ஒரே பட்டையுடன் இருக்கும் கொடி மர அமைப்பை கருடஸ்தம்பம் என்று சொல்வார்கள். சில ஊர்களில் கல்லில் கூட கொடி மரம் உள்ளது. இத்தகைய அமைப்புடைய கொடி மரத்தில் திருவிழா நாட்களில் கொடி ஏற்றுவார்கள். ஏன் கொடி ஏற்றுகிறார்கள் தெரியுமா?அதிலும் பல்வேறு தத்துவங்கள் அடங்கி உள்ளது. பொதுவாக கொடி என்பது ஆட்சி அதிகாரத்தை குறிக்கும். பழங்காலத்தில் ஒரு மன்னன் பக்கத்து நாடுமீது படையெடுத்து சென்று அந்நாட்டை பிடித்தால், அங்கு தன் அதிகாரம் வந்து விட்டத்தை குறிக்கும் வகையில் தனது கொடியை பறக்க விடுவான். அதே போன்று தான், திருவிழா



நடக்கும் நாட்களில் அந்த ஊர் முழுவதையும் ஆண்டவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உணர்த்த கோவில்களில் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. இது மக்கள் மன நிலையில் மாற்றம் ஏற்படுத்தவும், விழா சமயத்தில் வெளியாட்களால் நோய் பரவல் ஏற்படுவதையும் தடுக்கிறது. இதை கருத்தில் கொண்டே கொடி ஏற்றுவதற்கு முன்பு கல்பம், அனுகல்பம் என்ற இருவகை சடங்குகளை செய்வார்கள். கொடி ஏற்றுவதற்கு முன்பு தேவதைகளை ஆவாகனம் செய்வது கல்பம் எனப்படும்.கொடி ஏற்றிய பிறகு தேவதைகளை ஆவாகனம் செய்வது அனுகல்பம் எனப்படும். இந்த சடங்குகள் மூலம் கோவில் கொடி மரங்கள் சக்தி மிக்கவைகளாக மாறுகின்றன. இத்தகைய மரத்தில் கொடி ஏற்றுவது இறைவனின் படைப்புத் தொழிலை குறிப்பதாக சொல்கிறார்கள்.எப்படி தெரியுமா?கொடி மரம் என்பது இறைவன், கொடிக் கயிறு -சக்தி, கொடித் துணி -ஆத்மா, கொடி ஏற்ற பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு -பாசம் ஆகியவற்றை குறிக்கும். கோவிலில் கொடி ஏற்றும் போது குருக்கள் வேதமந்திரங்கள் முழங்க, தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து, வளைத்து ஏற்றுவார்கள். இது உயிர்களையும், அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதை உணர்த்துகிறது. இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு நம்மனதை பலியிட வேண்டும், என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை காட்டும் வகையில் கொடி மரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். லௌகீக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் நாம், எல்லோருமே பாசத்துக்கு கட்டுப்பட்டவர்கள்.தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால், கொடி துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் இறைவன் திருவடியை அடைதல் என்ற தத்தவத்தை கொடி ஏற்றம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது. நமது உயிர் இறைவன் திருவடியை தஞ்சமடைய வேண்டுமானால் நம் மனமும் ஒரு முகமாக நிலை நிறுத்தப்பட வேண்டும். இதை உணர்த்த கொடி மரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சொல்கிறார்கள். இன்னொரு வகையில் சொல்வதென்றால் அசுர சக்திகளை அகற்ற, சிவகணங்களை கோவிலுக்குள் அழைக்க, ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவே கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. அதனால் தான் கொடி மர உச்சியில், அந்தந்த ஆலய இறைவனின் வாகனம் ஒரு அடையாள சின்னமாக அமைக்கப்படுகிறது.சிவன் கோவிலில் நந்தி, பெருமாள் கோவிலில் கருடன், அம்மன் கோவிலில் சிங்கம், விநாயகர் கோவிலில் எலி, முருகன் கோவிலில் மயில், சாஸ்தா கோவிலில் குதிரை உருவம் அமைக்கப்படும். இந்த உருவங்களைத்தான்அந்தந்த ஆலயங்களில் கொடிகளில் வரைந்து ஏற்றுவார்கள். கீழ் நிலையில் உள்ள ஆன்மாவை இறைவன் உயர்நிலைக்கு உயர்த்துகிறான் என்பதை இது காட்டுகிறது.இப்படி பல்வேறு வகைகளில் சிறப்புடைய கொடி மரத்துக்கு மூல லிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம், அராதனை, நைவேத்தியம் முதலிய அனைத்தும் செய்யவேண்டும் என்பது விதியாகும். அந்த அளவுக்கு கொடி மரம் மூலவருக்கு நிகரானது. இன்னும் சொல்லப்போனால், கொடி மரம் அருகில் நின்று நாம் செய்யும் எல்லா பிரார்த்தனைகளும் மூலவரிடம் எதிரொலிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.கொடி மரத்தை தொட்டு வணங்கினால் மட்டும் போதாது. சுற்றி வந்தும் வணங்குதல் வேண்டும். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓரறிவை ஆறறிவு வணங்குகிறது என்று பாடியுள்ளார். ஓரறிவுள்ள மரத்தை ஆறறிவுள்ள மனிதன் வழிபடுகிறான் என்பது இதன் பொருள். இந்த வணக்க முறைக்கும் விதிமுறை உள்ளது. நாம் கால் நீட்டி விழுந்து வழிபடும்போது, பின்புறம் எந்த தெய்வ சன்னதியும் இருக்கக் கூடாது. ஆலயத்தின் உள்ளே பல சன்னதிகள் இருக்கும் என்பதால்தான் விழுந்து வணங்கக் கூடாது. கொடி மரம் இருக்கும் பகுதியில் எந்த சன்னதியும் இருக்காது என்பதால்தான் கொடி மரம் அருகே விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள். ஆண்கள் எப்போதும் 2 கால்கள், 2 கைகள், 2 காதுகள், நெற்றி, மார்பு ஆகிய 8 உறுப்புகளும் தரையில் படும் வகையில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பெண்கள் தலை, 2 முழங்கால், 2 உள்ளங்கைகள் ஆகிய 5 உறுப்பபுகள் தரையில் பட பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். கொடிமரத்தை வழிபடும்போது நேராக நின்று வணங்கக் கூடாது. கெட்ட கதிர்கள் நம் உடலுக்கு கெடுதல் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் அப்படி சொல்லி வைத்துள்ளனர். பொதுவாக கோவிலில் யாக வேள்விகள் நடத்தும்போது அவற்றை கொடி மரம் அருகில்தான் நடத்துவார்கள். இதனால் அந்த இடம் மந்திர சக்தி மிகுந்த இடமாக மாறும்.அடிக்கடி யாக வேள்விகள் நடத்தும்பட்சத்தில் ஆல்பா, பீட்டா, காமா கதிர்கள் நிரம்பி விடும். ஆல்பா, பீட்டா இரு கதிர்களும் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் காமா கதிர்கள் பெரும் கெடுதல் ஏற்படுத்தி விடும். எனவேதான் கொடி மரம் எதிரில் நின்று கும்பிடாமல் சற்று ஓரமாக நின்று வழிபட்டு செல்ல வேண்டும்.

கவிஞர்
**பாலசந்தர்**
மண்ணைச்சநல்லூர்

# தினம் ஒரு தலைவர்கள்
# சுசேதா கிருபளானி வரலாறு

சுசேதா கிருபளானி 25 ஜூன் 1908 1 டிசம்பர் 1974 ஒரு இந்திய அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார் . அவர் இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராகவும் , 1963 முதல் 1967 வரை உத்தரபிரதேச அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார் .

ஆரம்ப கால வாழ்க்கை
அவர் பஞ்சாபின் இப்போது ஹரியானாவில் உள்ளது) அம்பாலாவில் ஒரு பெங்காலி பிராஹ்ம குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை சுரேந்திரநாத் மஜூம்தார், ஒரு மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார் , அந்த வேலைக்கு பல இடமாற்றங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, அவர் பல பள்ளிகளில் பயின்றார் , அவரது இறுதிப் பட்டம் டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் ஆகும் .
நாட்டின் சூழல் தேசியவாத உணர்வுகளால் சூழப்பட்டு , சுதந்திரப் போராட்டம் உத்வேகம் பெற்று வந்த காலம் அது.
அவள் ஒரு கூச்ச சுபாவமுள்ள குழந்தை, தன் தோற்றம் மற்றும் அறிவுத்திறன் குறித்து சுயநினைவு கொண்டவள் என்று அவள் தனது "முடிக்கப்படாத சுயசரிதை" புத்தகத்தில் சுட்டிக்காட்டுகிறாள் . அவள் வளர்ந்த வயதும் அவள் எதிர்கொண்ட சூழ்நிலைகளும் தான் அவளுடைய ஆளுமையை வடிவமைத்தன. 10 வயதில், தானும் தன் உடன்பிறந்தவர்களும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி தங்கள் தந்தையும் அவரது நண்பர்களும் பேசுவதைக் கேட்டதாக சுசேதா விவரிக்கிறார். இது அவர்களை மிகவும் கோபப்படுத்தியது, அவர்கள் விளையாடிய சில ஆங்கிலோ-இந்திய குழந்தைகள் மீது , அவர்களைப் பெயர் சொல்லி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிவதற்கு முன்பு, இந்திரபிரஸ்தா கல்லூரி மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்தார் . 1936 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய நபரான ஜே.பி. கிருபளானியை மணந்தார் , அவர் தன்னை விட இருபது வயது மூத்தவர். இந்த திருமணத்தை இரு குடும்பத்தினரும், காந்தியும் எதிர்த்தனர் , இருப்பினும் அவர் இறுதியில் விட்டுக்கொடுத்தார்.

சுதந்திர இயக்கம் மற்றும் சுதந்திரம்
அவரது சமகாலத்தவர்களான அருணா ஆசஃப் அலி மற்றும் உஷா மேத்தாவைப் போலவே, அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முன்னணியில் வந்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிவினை கலவரங்களின் போது மகாத்மா காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றினார். 1946 இல் அவர் அவருடன் நோகாலிக்குச் சென்றார். இந்திய அரசியலமைப்பு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பெண்களில் இவரும் ஒருவர். கான்பூர் தொகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய துணைக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருந்தார் . இந்திய அரசியலமைப்புக்கான சாசனத்தை வகுத்த துணைக்குழுவின் ஒரு பகுதியாக அவர் ஆனார். ஆகஸ்ட் 14, 1947 அன்று, நேரு தனது புகழ்பெற்ற " டெஸ்டினியுடன் ட்ரைஸ்ட் "






உரையை நிகழ்த்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, இவர் அரசியலமைப்பு சபையின் சுதந்திர அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார் . 1940 இல் நிறுவப்பட்ட அகில இந்திய மகிளா காங்கிரஸின் நிறுவனர் ஆவார்.

சுதந்திரத்திற்குப் பிறகு

1949 ஆம் ஆண்டில் (இடமிருந்து வலமாக) உல்லா லிண்ட்ஸ்ட்ரோம் , பார்பரா கோட்டை , கெய்ரின் வில்சன் மற்றும் எலினோர் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் கிருபளானி .
சுதந்திரத்திற்குப் பிறகும், அவர் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டார். 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் மக்களவைத் தேர்தலில், அவர் புது தில்லியில் இருந்து KMPP டிக்கெட்டில் போட்டியிட்டார் : ஒரு வருடம் முன்பு தனது கணவர் நிறுவிய குறுகிய காலக் கட்சியில் சேர்ந்தார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் மன்மோகினி சாகலைத் தோற்கடித்தார் . ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அதே தொகுதியிலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் இந்த முறை காங்கிரஸ் வேட்பாளராக. அவர் கடைசியாக 1967 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் உள்ள கோண்டா தொகுதியிலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் . இதற்கிடையில், அவர் உத்தரபிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார் . 1960 முதல் 1963 வரை, அவர் உ.பி. அரசாங்கத்தில் தொழிலாளர், சமூக மேம்பாடு மற்றும் தொழில்துறை அமைச்சராக பணியாற்றினார். அக்டோபர் 1963 இல், அவர் உத்தரபிரதேசத்தின் முதலமைச்சரானார் , எந்தவொரு இந்திய மாநிலத்திலும் அந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணி. அவரது பதவிக் காலத்தின் சிறப்பம்சம் மாநில ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை உறுதியாகக் கையாண்டது. மாநில ஊழியர்களின் இந்த முதல் வேலைநிறுத்தம் 62 நாட்கள் தொடர்ந்தது. ஊழியர்களின் தலைவர்கள் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டபோதுதான் அவர் விலகினார். ஊதிய உயர்வுக்கான அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம் கிருபளானி ஒரு உறுதியான நிர்வாகியாக தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொண்டார். நிர்வாக முடிவுகள் மற்றும் கட்சி அமைப்பில் மூத்த தலைவர் நிர்மல் சந்திர சதுர்வேதி, எம்.எல்.சி., அவருக்கு ஆதரவளித்தார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, மொரார்ஜி தேசாய் பிரிவுடன் சேர்ந்து கட்சியை விட்டு வெளியேறி NCO ஐ உருவாக்கினார். 1971 தேர்தலில் பைசாபாத் (லோக்சபா தொகுதி) தொகுதியில் NCO வேட்பாளராக அவர் தோல்வியடைந்தார் . 1971 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவர் 1974 இல் இறக்கும் வரை தனிமையில் இருந்தார்.

## மூன்று நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்றார் ஜெய்சங்கர்: அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை

**புதுடெல்லி, பிப்.4:**

வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மூன்று நாள்கள் பயணமாக அமெரிக்காவுக்கு திங்கள்கிழமை புறப்பட்டார். அங்கு அந்நாட்டு அமைச்சர்களுடன் அரியவகை கனிம வளங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அவர் விவாதிக்க இருக்கிறார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் வரி விதிப்புகள் உள்ளிட்ட செயல்பாடுகள் காரணமாக அந்த நாட்டுடனான இந்திய உறவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மோசமாக உள்ளது. அண்மையில், இந்திய - ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து டிரம்ப் அதிருப்தி தெரிவித்தார்.

மேலும், இந்தியா இனி (அமெரிக்க கட்டுப்பாட்டில் உள்ள) வெனிசுலாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் என்றும், இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாகவும் தன்னிச்சையாக அறிவித்தார். இந்தச் சூழ்நிலையில் ஜெய்சங்கரின் அமெரிக்கப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பிப்ரவரி 2 முதல் 5-ஆம் தேதி வரை அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்கிறார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தலைமையில் அரியவகை கனிமங்கள் விவகாரம் தொடர்பாக அது சார்ந்துதுறை அமைச்சர்களுடன் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க இருக்கிறார். கனிமங்கள் மட்டுமின்றி எரிசக்தி விநியோகம் தொடர்பான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுகிறார். அமெரிக்க அதிபரின் நிர்வாகத்தில் உள்ள மூத்த அதிகாரிகளையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச இருக்கிறார்' என்று கூறப்பட்டுள்ளது.

## சென்னை – பெங்களூரு இனி 1.13 மணி நேரத்தில் பயணம்: அஷ்வினி வைஷ்ணவ்

**புதுடெல்லி, பிப்.4:**



புல்லட் ரயில் பயன்பாட்டுக்கு வந்தால் சென்னையிலிருந்து பெங்களூருக்கு 1.13 மணி நேரத்தில் செல்ல முடியும் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

இது குறித்து மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்ததாவது:

"தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்காக 2009-14 காலகட்டத்தில் ஆண்டுக்கு சராசரி ஒதுக்கீடு ரூ. 879 கோடியாக இருந்த நிலையில், 2026-27 நிதியாண்டில் 9 மடங்கு உயர்ந்து ரூ. 7,611 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு 2 புல்லட் ரயில்கள் மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் ரயில்வே துறைக்கு ரூ. 7,611 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, சென்னை -பெங்களூரு மற்றும் சென்னை - ஹைதராபாத் ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் இரண்டு புதிய புல்லட் ரயில் திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன

புல்லட் ரயிலின் மூலம் சுமார் 1 மணி நேரம் 13 நிமிடங்களில் சென்னையில் இருந்து பெங்களூருக்கு செல்ல முடியும்; சென்னையில் இருந்து ஹைதராபாத்துக்கு 2 மணி நேரம் 55 நிமிடங்களில் செல்ல முடியும்" என்றார்

நாட்டின் அதிவேக ரயில் இணைப்புக்கான உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஒன்றான அகமதாபாத்-மும்பை புல்லட் ரயில் திட்டம், 508 கி.மீ. தொலைவுடையது.

இது குஜராத் மற்றும் தாத்ரா-நகா ஹவேலியில் 352 கி.மீ., மகாராஷ்டிரத்தில் 156 கி.மீ. தொலைவுக்கு அதிநவீன பொறியியல் நுட்பங்களுடன் உலகத் தரத்தில் கட்டமைக்கப்படுகிறது. இதில் 465 கி.மீ. அதாவது 85 சதவீதம் பாலங்களைக் கொண்டதாகும்.

இந்த புல்லட் ரயில் பயன்பாட்டுக்கு வரும்போது, மும்பை-அகமதாபாத் பயண நேரம் 2 மணி நேரம் 17 நிமிடங்களாக குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிகார் சட்டப்பேரவைக்கு சக்கர நாற்காலியில் வந்த தேஜஸ்வி யாதவ்!

**பாட்னா, பிப்.4:**

பிகார் சட்டப்பேரவைக்கு ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சி செயல் தலைவரும், முன்னாள் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் (36), சக்கர நாற்காலியில் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பிகார் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் திங்கள்கிழமை தொடங்கியது. தேஜஸ்வி யாதவ் பேரவைக்கு சக்கர நாற்காலியில் வந்து கலந்து கொண்டார். இதையடுத்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: எனது வலது கால் பெருவிரலில் பலத்த காயம் ஏற்பட்டது. விரலில் உள்ள நகம், அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. இதனால் நடப்பது கடினமாக உள்ளது. பிகார் ஆளுநரின் பேச்சு, மாநில அரசால் தயாரிக்கப்பட்டது. வளர்ச்சிக் காரணிகளில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பிகார் பின்தங்கிய போதிலும், ஆளுநர் உரையில் வளர்ச்சி நல்ல நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளாக அவரே (நிதிஷ்குமார்) முதல்வர் நாற்காலியில் உள்ளார். அப்படி இருக்கையில் ஏன் இந்நிலை என்பது குறித்து அரசு மௌனம் காக்கிறது. இதேபோல், பிகாரில் பாலியல் வன்கொடுமைகள், கொலைகள், பிற குற்றங்கள் தொடர்ந்து அரங்கேறுகின்றன. ஆனால் மாநில அரசோ, சட்டம்-ஒழுங்கு நிலை நன்றாக இருப்பதாகத் தெரிவிக்கிறது.

## "இவ்வளவு பொய் பேசும் தலைமை தேர்தல் ஆணையரை பார்த்ததே இல்லை" - மம்தா காட்டம்



**புதுடெல்லி, பிப்.4:**

திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை இன்று சந்தித்தார். அவருடன் 15 பேர் கொண்ட கட்சி நிர்வாகிகளும், தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏராளமான பொதுமக்களும் சென்றனர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி, "நான் மிகவும் வருத்தமாக இருக்கிறேன். நான் டெல்லி அரசியலில் நீண்ட காலமாக இருக்கிறேன். 4 முறை அமைச்சராகவும், 7 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளேன்.

இவ்வளவு ஆணவமாகவும் இவ்வளவு பொய் பேசுபவராகவும் இருக்கும் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையரை நான் பார்த்ததே இல்லை. உங்கள் நாற்காலியை நான் மதிக்கிறேன் என்று நான் அவரிடம் சொன்னேன். ஏனென்றால், எந்த நாற்காலியும் யாருக்கும் நிரந்தரமல்ல. ஒரு நாள் நீங்கள் வெளியேறத்தான் வேண்டும். மேற்கு வங்கம் ஏன் குறிவைக்கப்படுகிறது? ஜனநாயகத்தில் தேர்தல்கள் ஒரு திருவிழா. ஆனால், நீங்கள் 58 லட்சம் பெயர்களை நீக்கிவிட்டீர்கள். அவர்களுக்கு இருக்கும் உரிமையை அவர்கள் பாதுகாத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், தேர்தல் நடைபெறும் மாநிலங்களை தவிர்த்துவிட்டு முறையான திட்டமிடலுடன் செய்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் (தேர்தல் ஆணையம்) அவ்வாறு செய்யவில்லை. அசாமில் தீவிர திருத்தப் பணிகளை நீங்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால், மேற்கு வங்கத்திலும் தமிழ்நாட்டிலும் செய்திருக்கிறீர்கள். இதில் நிறைய முரண்பாடுகளும் தவறான பதிவுகளும் உள்ளன என்றார்.

## மோமோஸுக்காக ரூ. 85 லட்சம் நகை! சிறுவனை ஏமாற்றிய 3 இளைஞர்களுக்கு வலைவீச்சு!

**புதுடெல்லி, பிப்.4:**

உத்தரப் பிரதேசத்தில் மோமோஸுக்காக சிறுவன் ஒருவன், வீட்டில் இருந்த ரூ. 85 லட்சம் மதிப்புடைய நகையை வியாபாரிகளிடம் கொடுத்துள்ளார். அப்பகுதியில் மோமோஸ் கடை நடத்திவரும் 3 இளைஞர்கள் சிறுவனிடம் நன்கு பழகி, நகைகளைப் பெற்றுக்கொண்டு மோமோஸ் வழங்கியுள்ளனர். இது காவல் துறையின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் தியோரியா மாவட்டத்தில், வாழ்நாள் முழுவதும் இலவசமாக மோமோஸ் தருவதாகக் கூறிய 3 இளைஞர்களை நம்பி, 7 ஆம் வகுப்பு பயிலும் சிறுவன், வீட்டில் இருந்த ரூ. 85 லட்சம் மதிப்பிலான நகைகளைக் கொடுத்துள்ளார்.

சிறுவனின் சகோதரி பெற்றோரிடம் நகைகளைக் கேட்டு அழுதுள்ளார். அப்போது, பெற்றோர் அலமாறியைத் திறந்து பார்க்கும்போது வீட்டில் நகைகள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து சிறுவனிடம் கேட்டபோது, மோமோஸுக்காக வியாபாரிகளிடம் நகைகளைக் கொடுத்ததைக் கூறியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட காவல் துறையினர், 3 இளைஞர்களே இதற்கு காரணம் என்பதை கண்டறிந்தனர். 3 இளைஞர்களும் தியோரியா - கசாயா சாலையில் மோமோஸ் கடை நடத்தி வருகின்றனர். சிறுவனின் தந்தை கொடுத்த புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து, 3 இளைஞர்களையும் தேடி வருகின்றனர்.

## டிசம்பரில் விமான சேவை கடும் பாதிப்பு: பயணிகளுக்கு ரூ. 22 கோடிக்கும் மேல் இழப்பீடு வழங்கிய இண்டிகோ!

**புதுடெல்லி, பிப்.4:**





2025 டிசம்பரில் இண்டிகோ நிறுவன விமான சேவைகள் முடக்கத்துக்கு இழப்பீடாக பயணிகளுக்கு அந்த ஒரு மாதத்தில் மட்டும் அந்நிறுவனம் ரூ. 22 கோடி இழப்பீடு வழங்கியுள்ளது.

விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணிநேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிடிஎல்) கடந்த ஆண்டு நவ. 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தன.


இந்த மாற்றங்களுக்கு ஏற்ப இண்டிகோ நிறுவனம் முன்கூட்டியே திட்டமிடாததால், விமானிகள், விமானப் பணிப்பெண்கள் உள்ளிட்டோர் அடங்கிய பணிக் குழுவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால், இண்டிகோ நிறுவன விமான சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதன்விளைவாக, டிசம்பர் தொடக்கத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டு பயணிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.

இந்த நிலையில், விமானம் ரத்து, தாமதமாகுதல் அல்லது பிற காரணங்களுக்காக பயணிகளுக்கு சேவைக் குறைபாடு ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டைச் சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்கள் வழங்க வேண்டும். அந்த வகையில், கடந்த 2025-ஆம் ஆண்டின் டிசம்பரில், விமான நிறுவனங்கள் பயனிகளுக்கான இழப்பீடாக செலவழித்த தொகை மொத்தம் ரூ. 24 கோடிக்கும் மேல் என்ற தகவலை மாநிலங்களவையில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், இண்டிகோ நிறுவனம் ரூ. 22.68 கோடியும், ஏர் இந்தியா குழுமம் ரூ. 74.61 லட்சமும், ஸ்பைஸ்ஜெட் மற்றும் ஏர் ஆகாஷா தலா ரூ. 40 பயணிகளுக்காக வழங்கியுள்ளன.

## இரவில் கல்லறைக்கு பிரியாணி ஆர்டர் செய்த பெண்! டெலிவரி செய்ய மறுப்பு!

**புதுடெல்லி, பிப்.4:**



இரவில் கல்லறையில் இருந்தவாறு பெண் ஒருவர் பிரியாணி ஆர்டர் செய்துள்ளார். இதனைக் கொண்டுவந்த உணவு விநியோய ஊழியர், அச்சத்தின் காரணமாக உணவை விநியோகிக்காமல் சென்றுள்ளார்.

கல்லறைக்கு வெளியே இருந்து அப்பெண்ணுக்கு அழைத்தபோது, நேராக உள்ளே வருமாறு அவர் கூறியுள்ளார்.

இதனால் அச்சமடைந்த உணவு விநியோக ஊழியர், ஆர்டரை ரத்து செய்யுமாறு பணிவுடன் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்துள்ளார்.

இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது. ஒருபுறம் நகைப்பாக இருந்தாலும் உணவு விநியோக ஊழியரின் இடத்தில் இருந்து பார்த்தால், மிகவும் மோசமான அனுபவமாகவே இருக்கும் என பலர் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

இந்த விடியோவில் உணவு விநியோக உழியர் ஒருவர், இரவு நேரத்தில் தனது கடைசி உணவு (பிரியாணி) ஆர்டரை டெலிவரி செய்யச் செல்கிறார். அந்த இடம் நேராக கல்லறைக்கு வெளியே சென்று முடிகிறது. இதனால், பிரியாணி ஆர்டர் செய்த பெண்ணுக்கு தொலைபேசியில் அழைக்கிறார். உணவு டெலிவரி செய்ய வேண்டிய இடத்திற்கு வந்துவிட்டதாகவும், உணவை வாங்கிக்கொள்ளுமாறும் கூறுகிறார். ஆனால், அப்பெண் கல்லறையின் வாயிலில் நுழைந்து நேராக வருமாறு கூறுகிறார்.

உள்ளே பார்ட்டி கொண்டாட்டத்தில் இருப்பதாகவும், பிரியாணியை கொண்டுவந்து தருமாறும் கூறுகிறார். இதனால் அச்சமடைந்த உணவு விநியோக ஊழியர், கண்ணியமாக உணவு ஆர்டரை ரத்து செய்துகொள்ளுமாறு கூறுகிறார். தனக்கு அச்சமாக இருப்பதாகக் கூறி அழைப்பை துண்டித்துவிட்டு அந்த இடத்திலிருந்து புறப்படுகிறார். இந்தக் காட்சிகள் இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

## பொதுத் துறை வங்கிகளில் 49% அந்நிய நேரடி முதலீடு: மத்திய அரசு பரிசீலனை

**புதுடெல்லி, பிப்.4:**

பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக அதிகரிக்க மத்திய அரசு பரிசீலித்து வருவதாக மத்திய நிதியமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறை செயலர் எம்.நாகராஜு தெரிவித்தார்.

இப்போது பொதுத் துறை வங்கிகளில் 20 சதவீதமும், தனியார் வங்கிகளில் 74 சதவீதமும் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டில்லியில் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த எம்.நாகராஜு இது தொடர்பாக கூறுகையில், 'பொதுத்துறை வங்கிகளின் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக அதிகரிப்பது குறித்து மத்திய அரசு தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. மத்திய அமைச்சங்களுக்கு இடையே இது தொடர்பாக ஆலோசனை நடத்தப்படுகிறது.

ஐடிபிஐ வங்கி விற்பனை தொடர்பான அறிவிப்பு மற்றும் அதற்கான நிதி 'டெண்டர்' இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்தில் வெளியாகும்' என்றார். பல வங்கிகளை இணைத்து ஒரு சில பெரிய வங்கிகளை உருவாக்கும் திட்டம் தொடர்பான கேள்விக்கு, 'நமது நாடு பெரியது எனவே, அதற்கு ஏற்ப 3 அல்லது 4 மிகப்பெரிய வங்கிகள் அவசியம்தான்' என்றார்.

மொத்தமுள்ள 12 பொதுத் துறை வங்கிகளில் மத்திய அரசின் பங்குகளின் எண்ணிக்கை கடந்த 2020-ஆம் ஆண்டு முதல் குறையாமல்தான் உள்ளது. எனினும், விகிதம் அடிப்படையில் மத்திய அரசு கைவசம் உள்ள பொதுத்துறை வங்கிகளின் பங்குகள் குறைந்தே வருகின்றன. வங்கிகள் சந்தையில் பங்குகளை வெளியிட்டு தங்கள் மூலனதத்தை அதிகரித்து வருவதே இதற்குக் காரணமாகும்.

## திறன் மேம்பாட்டுத் திட்ட முறைகேடு வழக்கில் சந்திரபாபு நாயுடுவுக்கு தொடர்பு இல்லை: அமலாக்கத் துறை

**விசாகப்பட்டினம், பிப்.4:**

திறன் மேம்பாட்டுக் கழக முறைகேடு தொடர்பான வழக்கில், ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு அமலாக்கத் துறை நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. குற்றம்சாட்டப்பட்ட சம்பவத்தில் அவருக்கு நேரடி அல்லது மறைமுகத் தொடர்பு இல்லை என்றும் அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது. விசாகப்பட்டினத்தில் உள்ள எம்.பி, எம்எல்ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் ஜனவரி 31 அன்று தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் குற்றப் பத்திரிகையில், திறன் மேம்பாட்டுக் கழக முறைகேடு வழக்கில் சந்திரபாபு நாயுடுவுக்குத் தொடர்பு இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அமலாக்கத் துறை கூறியுள்ளதுடன், இந்த வழக்கில் அவரை குற்றம்சாட்டப்பட்டவராக சேர்க்கவில்லை. முன்னதாக, திறன் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான முறைகேடுகளில் சந்திரபாபு நாயுடுவுக்குத் தொடர்பு இல்லை என்பதை ஆந்திரப் பிரதேச குற்றப் புலனாய்வுத் துறையும் உறுதிப்படுத்தியிருந்தது. வழக்கை வாபஸ் பெற அனுமதித்தபோது, விஜயவாடா ஊழல் தடுப்புப் பிரிவு நீதிமன்றமும், குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்த முகாந்திரமும் இல்லை என்று தெளிவுபடுத்தியது.

## மனைவியை குத்திக்கொன்ற வழக்கில் அரசு ஊழியருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**திருவனந்தபுரம், பிப்.4:**

கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டம் சேர்த்தலை பள்ளிபுரத்தை சேர்ந்தவர் ராஜேஷ் (வயது 31). இவர் கேரள அரசு படகு போக்குவரத்து துறையில் ஊழியராக பணியாற்றி வந்தார். இவருடைய மனைவி அம்பிளி (27). இவர் அந்த பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவு வங்கியில், பணம் வசூல் செய்யும் முகவராக பணியாற்றி வந்தார்.

இந்தநிலையில் மனைவியின் நடத்தையில் ராஜேசுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதற்கிடையே அம்பிளி பணம் வசூலை முடித்து விட்டு வீடு நோக்கி ஸ்கூட்டரில் பள்ளிபுரம் கிராம நிர்வாக அலுவலகம் அருகே வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ராஜேஷ், அம்பிளியை நடு ரோட்டில் வழிமறித்து திடீரென மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக குத்தினார். பின்னர் வசூல் பணத்துடன் அங்கிருந்து தலைமறைவானார். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த கொலைவெறி தாக்குதலில் பலத்த காயமடைந்த அம்பிளியை, அருகில் நின்றவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அம்பிளி பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் கடந்த 2024-ம் ஆண்டு மே மாதம் 18-ந்தேதி நடந்தது. இந்த கொலை தொடர்பாக சேர்த்தலை போலீசார் வழக்குப்பதிவு செய்து ராஜேசை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை ஆலப்புழை கூடுதல் செசன்சு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி பாரதி, ராஜேஷை குற்றவாளி என அறிவித்தார். மேலும் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.2 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

## வர்த்தக ஒப்பந்தம்: காங்கிரஸ் விமர்சனம்

**புதுடெல்லி, பிப்.4:**

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்த நிலையில் பிரதமர் மோடியை காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் கடுமையாக விமர்சித்தார்.

அவர் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீது இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்தியதாக வாஷிங்டன் டி.சி.யில் இருந்து டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

ரஷியா மற்றும் வெனிசுலாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியில் இந்தியா ஈடுபடும் தகவல்களையும் டிரம்ப்தான் வெளியிட்டார். தற்போது இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தையும் அவரே அறிவித்துள்ளார். ஒப்பந்தத்தின் அம்சங்கள் தொடர்பான முழு தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

டிரம்ப்புடன் பிரதமர் மோடி தொலைபேசியில் கலந்துரையாடியதையும் அந்நாட்டு அதிகாரியே தெரிவித்தார்.

இதன்மூலம் பிரதமர் மோடியை டிரம்ப் கட்டுப்படுத்துவது தெளிவாகியுள்ளது. பிரதமர் மோடி இறுதியில் சரணடைந்தார்' என குறிப்பிட்டுள்ளார்.

## கடந்த ஜனவரி மாதம் மின்சார இருசக்கர வாகனங்கள் பதிவு உயர்வு

**புதுடெல்லி, பிப்.4:**

நாட்டில் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதற்கு ஏற்றாற்போல் புதிதாக வாங்கும் மின்சார இருசக்கர வாகனங்களின் வாகனபதிவுகளும் உயர்ந்து வருகிறது. அந்தவகையில் நாடு முழுவதும் கடந்த ஜனவரி மாதம் பதிவான மின்சார வாகன பதிவுகள் குறித்தான விவரத்தை மத்திய அமைச்சகத்தின் வாகன் டேட்டா தெரிவித்துள்ளது. இதில் நாட்டில் மொத்தம் 2 லட்சத்து 8 ஆயிரம் மின்சார இருசக்கர வாகனங்கள் கடந்த மாதத்தில் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டு ஜனவரியை காட்டிலும் 22 சதவீதம் அதிகமாகும்.




## வளவனூர் அருகே 3 மாதத்தில் காதல் மனைவி மர்ம மரணம்

### கணவர் குடும்பத்தினர் மீது புகார்

**விழுப்புரம், பிப்.04:** வளவனூர் அருகே காதல் திருமணம் செய்துகொண்ட இளம்பெண் 3 மாதத்தில் தற் கொலை செய்துகொண்டதாக கூறப்படும் சம்பவத்தில் கணவர் குடும்பத்தினர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் வளவ னூர் அடுத்த சொர்ணாவூர் மேல் பாதி கிராமத்தைச் சேர்ந்தவர் வசந்தராஜ். இவரது மனைவி தேவ ஜெசி பிரியா (22). இவர் கள் மூன்று மாதத்துக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இதனால் மனமுடைந்த தேவ ஜெசி பிரியா இரு தினங்களுக்கு முன்பு வீட்டிலேயே தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

இவரது உடல் பிரேத பரிசோதனைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இதுகுறித்து வளவனூர் போலீஸார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மாற்று சமூகத்தைச் சேர்ந்தவரை காதல் திருமணம் செய்துகொண்ட தேவ ஜெசி பிரியாவை அடித்து கொலை செய்துவிட்டதாக கூறி, கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் அழகப்பாசமுத்திரம் கிரா மத்தைச் சேர்ந்த அவரது சகோதரர் ரிச்சர்டு மற்றும் குடும்பத்தினர், சமூக ஆர்வலர்கள், விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று திரண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் அவர்களிடம், ஆட்சியரிடம் மனு அளிக்கலாம் என அறிவுறுத்தினர். இதையடுத்து மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ் வழியாக ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மானுக்கு ரிச்சர்டு மனு அளித்தார்.

காவல் அவசர எண்ணில் புகார் செய்ததை தெரிந்துகொண்ட கணவர் குடும்பத்தினர் ஜன. 31-ம் தேதி எனது தங்கையை மீண்டும் தாக்கியுள்ளனர். இதுபற்றி எனது தங்கை தனது அத்தையிடம் கூறி அழுதுள்ளார்.

சிறிது நேரத்தில் அத்தையை தொடர்பு கொண்டு தேவஜெசி பிரியா தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டதாக வசந்தராஜ் தெரிவித் துள்ளார். தங்கையின் மரணத்தை எங்களால் ஏற்க முடியவில்லை.

அடித்து கொலை செய்துவிட்டு நாடகமாடு கின்றனர். வன்கொடுமை பிரிவில் வழக்கு பதிவு செய்து அனைவரையும் கைது செய்ய வேண்டும். அதுவரை உடலை பெற்றுக்கொள்ள மாட்டோம்" என குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் 2 நாட்களில் போதைப் பொருள் விற்பனை செய்த, கடத்திய 105 பேர் கைது

**சென்னை, பிப்.04:** சென்னையில் நடைபெற்ற 2 நாள் சிறப்பு தணிக்கையில் போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்ட 105 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் போதைப் பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையை முற்றிலும் தடுக்க போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு போலீஸார், காவல் நிலைய போலீ ஸாருடன் ஒருங்கிணைந்து, 2 நாட்கள் சிறப்பு தணிக்கையை மேற்கொண்டனர். இந்த தணிக்கை கடந்த 31, 1 ஆகிய தேதி களில் நடைபெற்றது.

அதன்படி, சென்னையில் உள்ள 12 காவல் மாவட்ட போலீ ஸாரும் அவர்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப் பொருட்களுக்கு எதிரான கண்காணிப்பை முடுக்கிவிட்டனர்.

இதில் சட்ட விரோதமாக கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் வைத்திருந்தது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 105 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் 46 கஞ்சா வழக்குகள், 11 மாத்திரை வழக்கு கள் அடங்கும். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 26 கிலோ கஞ்சா, போதைப் பொருளாக பயன்படுத்த மறைத்து வைத்திருந்த 1,888 வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 4 மோட்டார்சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

போதை மற்றும் புகையிலை பொருட்களை கடத்தி வருபவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மற்றும் விற்பனை செய் பவர்களை கைது செய்ய, வாகனத் தணிக்கைகள், தீவிர ரோந்து பணிகள் மற்றும் சிறப்பு அதிரடி தணிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடு படுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென் னை காவல் ஆணையர் அருண் எச்சரித்துள்ளார்.

## முகமூடி அணிந்து ஜவுளி அதிபர் வீட்டில் கத்திமுனையில் கொள்ளையில் ஈடுபட்ட வழக்கறிஞர் நண்பருடன் கைது

**சென்னை, பிப்.04:** ஜவுளி அதிபர் வீடு புகுந்து கத்தி முனையில் முகமூடி கொள்ளையில் ஈடுபட்ட வழக்கறிஞர் நண்பருடன் கைது செய்யப்பட்டார். சென்னை புழல், கிழக்கு காவாங்கரை, மகாவீர் கார்டன் மெயின் தெருவில் வசித்து வருபவர் விஜயகுமார்.

மணிப்பூரில் மொத்த துணி வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 30-ம் தேதி அதிகாலை இவரது வீட்டுக்குள் நுழைந்த முகமூடி கொள்ளையர்கள் கத்திமுனையில் விஜயகுமார், அவரது மனைவி, தாய் மற்றும் 2 மகள்களை மிரட்டி கட்டிப் போட்டு பீரோவிலிருந்த ரூ.25 லட்சம், 13 பவுன் தங்க நகை, பூஜை அறையில் வைத்திருந்த சுமார் 250 கிராம் வெள்ளி உள்ளிட்ட பொருட்களை கொள்ளையடித்து காரில் தப்பினர்.

இதுகுறித்து, புழல் போலீஸார் வழக்குப் பதிந்து, முதல் கட்டமாக சிசிடிவி கேமரா காட்சிகளில் பதிவான கொள்ளை யர்கள் தப்பிய கார் எண்ணை அடிப்படையாக வைத்து விசா ரணை நடத்தப்பட்டது.

இதில், கொள்ளையில் ஈடுபட்டது சென்னை எண்ணூர் பெரியகாசி கோவில் குப்பத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான ராகுல் (28), புழல் என்எஸ்கே தெருவைச் சேர்ந்த பிரவீன் குமார் (28) என்பது தெரிந்தது.

இவர்களை கைது செய்து சிறையில் அடைந்த போலீஸார் தலைமறைவாக உள்ள கூட்டாளிகளான 4 பேரை தனிப்படை அமைத்து தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## கன்னிவாடி மலைப்பகுதியில் தனியாரால் கட்டப்பட்ட அணையை இடிக்க கூடாது- மதுரை ஐகோர்ட் உத்தரவு



**மதுரை, பிப்.04:** கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி கே.குணசீலன் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:-

திண்டுக்கல் அடுத்த கன்னிவாடி மலை வடக்கு கிராமத்தில் 93 ஏக்கர் பட்டா நிலம் வைத்துள்ளேன். இதில் 53 ஏக்கரில் 'நிலம் வைத்து' இயற்கை விவசாயப் பண்ணை அமைத்து, தென்னை, அவகேடோ மற்றும் ஜாதிக்காய் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்து வருகிறேன்.

இந்நிலையில் நிலச்சரிவைத் தடுக்கவும், மழைநீரைச் சேமிக்கவும் தனது பட்டா நிலத்திலேயே அணை கட்ட மாவட்ட கலெக்டர் மற்றும் வேளாண் பொறியியல் துறையிடம் உரிய அனுமதி பெற்று, சுமார் 2 கோடி ரூபாய் செலவில் பணிகளை முடித்தேன். கடந்த டிசம்பர் மாதம் பண்ணைக்கு ஒரு முக்கிய நபர் வந்து சென்ற பிறகு, கன்னிவாடி வனச்சரகர் மற்றும் வனவர் ஆகியோரின் அணுகுமுறை மாறியது. அவர்கள் பணம் கேட்டு மிரட்டுவதாகவும், விவசாயப் பணிகளைத் தடுக்கப் போவதாக மிரட்டினர்.

எந்திரங்களைப் பயன்படுத்துவதால் யானைகள் ஊருக்குள் வருவதாக வனத்துறையினர் கூறுவது முற்றிலும் பொய், அந்தப் பகுதியில் யானைகளே இல்லை. மாவட்ட கலெக்டர் அனுமதி அளித்த பிறகும், வனச்சரகர் பணிகளை நிறுத்தச் சொல்லி நோட்டீஸ் அனுப்பியது சட்டவிரோதமானது.

எனவே வனச்சரகர் வெளியிட்ட தடை உத்தரவுகளை ரத்து செய்ய வேண்டும். விவசாயப் பணிகளை மேற்கொள்ளவும், வனப்பகுதி வழியாகச் செல்லும் பாதையைப் பயன்படுத்தவும் வனத்துறையினர் இடையூறு செய்யக்கூடாது என உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, இந்த வழக்கில் மனுதாரருக்கும் வனத்துறைக்கும் இடையே தகராறு உள்ளதாக தெரிகிறது. இருந்தாலும், ஏற்கனவே கட்டப்பட்ட அணையை எக்காரணம் கொண்டும் இடிக்கக்கூடாது. ஒருவேளை வனத்துறை அந்த அணையைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்தாலும், அதனை முறையாகப் பராமரிக்க வேண்டும். ஏனெனில், அந்த அணை வனவிலங்குகள் தண்ணீர் குடிக்கப் பயனுள்ளதாக இருக்கும்.

வனச்சரகர் பிறப்பித்த நடவடிக்கைகளுக்குஇடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. அணை ஏதேனும் இடிக்கப்பட்டிருந்தால், அதனை உடனடியாக வனத்துறையே மீண்டும் கட்டித்தர வேண்டும். இது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வனத்துறைக்கு உத்தரவிட்டு வழக்கை பிப்ரவரி 4-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் 12-ந்தேதி தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம்

**சென்னை, பிப்.04:** மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் வருகிற 12-ந்தேதி ஒரு நாள் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

மத்திய தொழிற்சங்கங்கள் சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி, ஐ. என். டி.யூ.சி, எல்.பி.எப். உள்ளிட்ட 12 தொழிற்சங்கங்கள் இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

தொழிலாளர்களுக்கு எதிராக மத்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டங்களை கண்டித்து போராட்டம் நடக்கிறது. தொழிலாளர் நலச் சட்டம் அனைத்தையும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக 4 ஆக சுருக்கி லேபர் கோடு என்று அமைக்கப்பட்டு சட்டங்கள் இருப்பதை கண்டிக்கும் வகையில் போராட்டத்தைதொழிலாளர்கள், விவசாயிகள் நடத்த திட்டமிட்டு உள்ளனர்.

சுமார் 25 கோடி தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர். தபால் துறை, இன்சூரன்ஸ், வங்கிகள், தணிக்கை துறை உள்ளிட்ட பல்வேறு துறை ஊழியர்கள் இதில் கலந்துகொள்ள தயாராகி வருகின்றனர்.

தொழிலாளருக்கு விரோதமாக கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர் சங்கங்கள் உள்ளிட்ட சில சங்கங்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவளித்து களத்தில் இறங்க உள்ளன.

12-ந்தேதி அண்ணா சாலையில் உள்ள தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்த திட்டமிட்டு இருப்பதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

### ஆஸ்திரேலியாவில் பரபரப்பு

## 420 கிலோ காந்தி சிலையை திருடிச் சென்ற கும்பலுக்கு வலை

**சிட்னி, பிப்.04:** ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் உள்ள ரோவில்லே பகுதியில் இந்திய சமுதாய கூடம் செயல்பட்டு வருகிறது. அங்கு சுமார் 240 கிலோ எடையுள்ள மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை 2021-ம் ஆண்டு நவம்பரில் அப்போதைய பிரதமர் ஸ்காட் மாரிசன் திறந்து வைத்தார்.






இந்நிலையில், இந்திய சமுதாய கூடத்தில் அமைக்கப்பட்டு இருந்த வெண்கல சிலையை மர்ம கும்பல் ஒன்று திருடிச் சென்றுள்ளது.கால்களைத் தவிர்த்து பிற உடல் பாகங்களுடன் காந்தியின் சிலையை திருடிச் சென்ற கும்பல் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் காந்தி சிலை திருடு போனது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## போலீஸ் ரோந்து வாகனத்தில் வந்து பைக்கை திருடியவர்!

**கோவை, பிப்.04:** கோவையில் காவல்துறையின் இருசக்கர வாகனத்தை திருடிவந்து, மற்றொருபைக்கைதிருடியவரை காவல்துறையினர் சிசிடிவி காட்சிகளைக் கொண்டு தேடி வருகிறார்கள்.

சாவியுடன் நிறுத்தப்பட்டிருந்த ரோந்து வாகனத்தை எடுத்துச் சென்றவரை சி.சி.டி.வி. காட்சிகளைக் கொண்டு அடையாளம் கண்டுபிடித்து விசாரணை நடைபெற்று வரும் சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

காவல்துறை வாகனத்தையே திருடி வந்து, அதை 'எக்ஸ்சேஞ்ச்' செய்வது போல ஓரிடத்தில் விட்டு விட்டு அங்கிருந்த வேறொரு வாகனத்தைத் திருடிச் சென்ற அந்தப் பலே திருடன் யார் ? - காவல் துறை உதவி ஆணையர் தலைமையில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கோவையில் காவல் துறையினரின் ரோந்து வாகனத்தையே திருடி வந்து, மற்றொரு நபரின் இருசக்கர வாகனத்தைத் திருடிச் சென்ற மர்ம நபரின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கோவை, சிவானந்தா காலனி, டாக்டர் ராதாகிருஷ்ணன் ரோட்டைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ஒருவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர் கடந்த 30-ஆம் தேதி இரவு தனது மோட்டார் சைக்கிளை வழக்கம் போல வீட்டின் அருகே உள்ள சாலை ஓரத்தில் நிறுத்தி விட்டு உறங்கச் சென்று உள்ளார். மறுநாள் காலை வந்து பார்த்த போது, அவரது இருசக்கர வாகனம் காணாமல் போனதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

காணாமல் போன தனது வாகனத்தைத் தேடிய போது, அந்த இடத்திற்கு அருகிலேயே மற்றொரு மோட்டார் சைக்கிள் சாவியுடன் நிற்பதை அந்த இளைஞர் கவனித்தார். இது குறித்து ரத்தினபுரி காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் வந்து பார்த்த போது, அங்கு சாவியுடன் நின்ற வாகனம் ரத்தினபுரி காவல் துறையினர் ரோந்து பணிக்குப் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் என்பது தெரியவந்தது.

காவல் துறையினரின் வாகனமே அங்கு நின்றதால் குழப்பம் அடைந்த போலீசார், அந்தப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா (CCTV) காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில் மர்ம நபர் ஒருவர், முதலில் ரத்தினபுரி காவல் நிலையத்திற்குச் சொந்தமான ரோந்து மோட்டார் சைக்கிளை காவல் நிலையத்திலிருந்து திருடி உள்ளார்.

அந்தப் போலீஸ் பைக்கிலேயே சிவானந்தா காலனி ராதாகிருஷ்ணன் சாலைக்கு வந்து உள்ளார். பின்னர், அந்தப் போலீஸ் பைக்கை அங்கேயே சாவியுடன் விட்டு விட்டு, அங்கு நிறுத்தி இருந்த உணவக ஊழியரின் பைக்கைத் திருடிக் கொண்டு மின்னல் வேகத்தில் மறைந்து உள்ளார்.காவல்துறை வாகனத்தையே திருடி வந்து, அதை 'எக்ஸ்சேஞ்ச்' செய்வது போல விட்டு விட்டு வேறொரு வாகனத்தைத் திருடிச் சென்ற அந்த திருடன் யார் ? என்பது குறித்து ரத்தினபுரி போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

காவல்நிலையத்திலிருந்தே வாகனத்தைத் திருடிச் சென்று பைக்கைத் திருடிய திருடன் பற்றி கோவையில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

## விக்டோரியா மகாலை காண வரும் பொதுமக்களுக்கு நவீன அறைகள்

### காத்திருந்து பார்க்க சிறப்பு ஏற்பாடு



**சென்னை, பிப்.04:** சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் விக்டோரியா மகால் அமைக்கப்பட்டது. கடந்த 1883-ம் ஆண்டு சீன செராமிக் கற்களால் கட்டப்பட்டுள்ள இந்த அரங்கம் தற்போது ரூ.32.62 கோடியில் அரசால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

விக்டோரியா மகாலை பொதுமக்கள் பார்ப்பதற்கு தனி இணையதளம் தொடங்கப்பட்டு உள்ளது. முன்பதிவு செய்து பொதுமக்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு ஸ்லாட் இருக்கும் வகையில் 60 பேர் அனுமதிக்கப்படுகிறார்கள். முன்பதிவு செய்யாமல் வருவோரும் மகாலை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. கியூ.ஆர்.கோடு மூலம் பெயர் பதிவு செய்யும் வசதி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்தவர்களுக்கு தனி அடையாள அட்டை வழங்கி அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த டிசம்பர் 27-ந்தேதி முதல் ஜனவரி மாதம் வரை சுமார் 25 ஆயிரம் பேர் விக்டோரியா பொது அரங்கை பார்வையிட்டுள்ளனர்.

தற்போது பொதுமக்கள் காத்திருந்து பார்க்கக்கூடிய சூழல் நிலவி வருவதால் காத்திருப்பு அறை புதிதாக கட்டப்பட்டுள்ளது. மழை, வெயில் பாதிப்பு இல்லாமல் பார்வையாளர்கள் அரங்கிற்கு செல்வதற்கு முன்னதாக குளு குளு வசதியுடன் கூடிய காத்திருப்பு அறையில் தங்க வைக்கப்படுகின்றனர். இந்த நவீன காத்திருப்போர் அறை 4 அமைக்கப்பட்டு இருப்பதால் அங்கு வரக்கூடிய பார்வையாளர்கள் அதில் சிறிது நேரம் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு அறையில் 20 பேர் வரை அமரலாம். இந்த வசதியை பொதுமக்கள் வரவேற்று இருப்பதோடு வெயில் மற்றும் மழையில் இருந்து விலகி பாதுகாப்பாக காத்திருந்து செல்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக பாராட்டுகின்றனர்.

## டெல்டா மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு- வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, பிப்.04:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நீலகிரி, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

நாளை தென்தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நீலகிரி, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஓரிருஇடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். 5-ந்தேதி தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

6-ந்தேதி முதல் 9-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதற்கிடையே இன்று முதல் 5-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்சவெப்பநிலைஇயல்பை ஒட்டி இருக்கக்கூடும்.

6 மற்றும் 7-ந்தேதிகளில் உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் $1-2^{\circ}$ செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை $30-31^{\circ}$ செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை $21-22^{\circ}$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை $30-31^{\circ}$ செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை $21-22^{\circ}$ செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## திருவள்ளூர்: தேவாலயத்திற்குள் ஊழியரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை!

**திருவள்ளூர், பிப்.04:** திருவள்ளூர் அருகே பட்டாபிராமில் கிறிஸ்துவ தேவாலயத்திற்குள் ஊழியரை கொலை செய்த வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

திருவள்ளூர் அடுத்த பட்டாபிராம் வள்ளலார் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆலய ஊழியராக இருந்து வந்தவர் ஈனோஸ் (63). இவர் உயிழந்தோர்களின் சடலங்கள் அடக்கம் செய்யும் பணி செய்து வந்தார்.

இந்த நிலையில் சடலத்தை அடக்கம் செய்ய அதிக பணம் கேட்டதால் அதே பகுதியைச் சேர்ந்த மோசஸ் என்பவருடன் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 11.3.2020-இல் கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்த ஈனோஸ் என்பவரை முன்விரோதம் காரணமாக மோசஸ் என்பவர் கத்தியால் குத்திவிட்டு தப்பி சென்றார். ஆனால் சம்பவ இடத்திலேயே பலத்த காயமடைந்த நிலையில் ஈனோஸ் உயிரிழந்தார். இது குறித்து ஈனோசின் மைத்துனர் மார்ட்டின் பட்டாபிராம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீஸார் வழக்குப்பதிவு செய்து மோசஸை கைது செய்தனர்.

திருவள்ளூர் மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கு இறுதியாக செவ்வாய்கிழமை நீதிபதி ஜூலியட் புஷ்பா முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது குற்றம் நிருபிக்கப்பட்டதால் மோசஸிற்கு ஆயுள் தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

# மது போதையில் வந்ததை தட்டிக் கேட்ட மனைவியை கத்தியால் குத்திய கணவர் தற்கொலை

**சென்னை, பிப்.4:** மது போதையில் வந்ததை தட்டிக் கேட்ட மனைவியை ஆட்டோ ஓட்டுநர் கத்தியால் குத்தியதோடு, தற்கொலையும் செய்து கொண்டார்.

கோயம்பேடு நெற்குன்றம், பி.எச். சாலை பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் ஆட்டோ ஓட்டுநர் தேவராஜ் (43). இவருக்கு சத்யா (37) என்ற மனைவியும், பிள்ளைகள் பிரீத்தி (17), யாதவ் (16) உள்ளனர்.

தேவராஜ் மதுப் பழக்கத்துக்கு அடிமையாகி தினமும் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் தகராறில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்துள்ளது. இதே போல் நேற்று முன்தினம் இரவு மது போதையில் வீட்டுக்கு வந்த தேவராஜ் மனைவி சத்யாவிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது. ஆத்திரம் அடைந்த தேவராஜ், சமையல் அறையிலிருந்த கத்தியால் மனைவியை குத்தியுள்ளார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மகனும் மகளும் கூச்சலிட்டனர். சத்தம் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர் சத்யாவை விரைந்து மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலும் தேவராஜை வீட்டுக்குள் தள்ளி வெளியே தாழ்ப்பாள் போட்டுவிட்டு கோயம்பேடு போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் கதவை திறக்க முயன்றபோது, கதவு உள்பக்கம் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது.

இதையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, தேவராஜ் தூக்கிட்டு தற்கொலை செய்தது தெரியவந்தது. அவரது உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சத்யாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக கோயம்பேடு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# ஏப்ரலில் ஜேஇஇ 2-ஆம் கட்ட முதன்மைத் தேர்வு: விண்ணப்பப் பதிவு தொடக்கம்



**சென்னை, பிப்.4:** நாடு முழுவதும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜேஇஇ இரண்டாம் கட்ட முதன்மைத் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கியுள்ளது.

நாட்டில் ஐஐடி, என்ஐடி போன்ற மத்திய உயாகல்வி நிறுவனங்களில் இளநிலைப் படிப்புகளில் சேர ஒருங்கிணைந்த நுழைவுத் தோவில் (ஜேஇஇ) தோச்சி பெறவேண்டும். இவை ஜேஇஇ முதன்மைத் தோவு, பிரதானத் தோவு என இரு பிரிவுகளாக நடைபெறும். முதன்மைத் தோவானது தேசிய தோவுகள் முகமை (என்டிஏ) சாாபில் ஆண்டுதோறும் 2 கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி 2026-27-ஆம் கல்வியாண்டுக்கான ஜேஇஇ முதல்கட்ட முதன்மைத் தோவு ஜன. 21 முதல் 30-ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இந்த தோவை சுமாா 12 லட்சம் போ வரை எழுதினா. இதன் முடிவுகள் பிப். 12-ஆம் தேதி வெளியிடப்படவுள்ளன.

இதைத் தொடாந்து ஜேஇஇ 2-ஆம் கட்ட தோவு ஏப். 1 முதல் 9-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு தற்போது தொடங்கியுள்ளது. ஆாவமுள்ள மாணவாகள் JEEMAIN.NTA.NIC.IN என்ற இணையதளம் வழியாக பிப். 25-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். முதல்கட்டத் தோவை எழுதிய மாணவாகளும் இதில் பங்கேற்கலாம். இந்தத் தோவு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உள்பட 13 மொழிகளில் நடத்தப்படும்.

தோவுக்கான அனுமதிச் சீட்டு வெளியீடு உள்ளிட்ட இதர தகவல்கள் பின்னா வெளியிடப்படும். இதுகுறித்த கூடுதல் விவரங்களை ய்ற்ஹ. ஹஸ்ரீ.ண்ய் என்ற வலைதளத்தில் அறிந்து கொள்ளலாம். தோவுக்கு விண்ணப்பிப்பதில் சிரமங்கள் இருந்தால், மாணவாகள் 011-40759000/69227700 என்ற தொலைபேசி எண் அல்லது JEEMAIN@NTA.AC.IN எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடாபு கொண்டு விளக்கம் பெறலாம் என்று என்டிஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ள பாதிப்புக்கு ஒரு வாரத்தில் இழப்பீடு: அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் உத்தரவு



**சென்னை, பிப்.4:** தமிழகத்தில் நாகப்பட்டினம், திருவாரூா மாவட்டங்களில் வெள்ள பாதிப்புக்குள்ளான கிராமங்களுக்கு ஒரு வாரத்தில் இழப்பீடு வழங்க வேண்டும் என அதிகாரிகளுக்கு வேளாண்மை - உழவா் நலத்துறை அமைச்சா் எம்.ஆா்.கே.பன்னீா்செல்வம் உத்தரவிட்டுள்ளாா்.

பயிா்க் காப்பீட்டுக்கான இழப்பீட்டுத் தொகைகளை உழவா்களுக்கு உடனடியாக வழங்குவது குறித்து ஆய்வு கூட்டம், வேளாண்மை, உழவா் நலத்துறை அமைச்சா் எம்.ஆா். கே.பன்னீா்செல்வம் தலைமையில் சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது அவா் பேசியதாவது:

கடந்த ஆண்டு குறுவை பருவத்தில் நெற்பயிா் அறுவடை பரிசோதனை விவரம், கணக்கீடு செய்யப்பட்ட சராசரி மகசூல் விவரம் தயாா் செய்து காப்பீட்டு நிறுவனங்கள் பிப். 14-ஆம் தேதிக்குள் ஒப்புதல் அளித்து, தகுதி வாய்ந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பிப். 15-ஆம் தேதி முதல் வரவு வைக்க வேண்டும். அண்மையில் வெள்ள பாதிப்புக்குள்ளான நாகப்பட்டினம், திருவாரூா மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு ஒரு வாரத்தில் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்றாா்.

கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையா் மற்றும் அரசுச் செயலா் வ.தட்சிணாமூா்த்தி, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையா் ஆா்.ஜெயா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையா் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநா் பி.முருகேஷ் உள்ளிட்டோா் பங்கேற்றனா்.

# நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாள் அமைதி பேரணி



**கடலூர், பிப்.4:** நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாள் அமைதி பேரணி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தலைமையில் நடந்தது. கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நெய்வேலி நகர திமுக மற்றும் தொமுச சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாள் அமைதிப் பேரணி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பேரணியானது வட்டம்-26 செல்வராஜ் மன்றத்திலிருந்து புறப்பட்டு தொமுச அருகே உள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து CBS பேருந்து நிலையத்தின் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் தண்டபாணி, முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ராசவன்னியன், புகழேந்தி, முன்னாள் தொமுச தலைவர்கள் திருமாவளவன், வீர. ராமச்சந்திரன், சிவந்தான்செட்டி, குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ்குமார், ஐயப்பன், நன்மாறபாண்டியன், மதியழகன், நாசர், ரவிச்சந்திரன், கருப்பன், செந்தமிழ்செல்வன், செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், காதர்பாட்ஷா, திருநாவுக்கரசு, பிச்சையா, ஸ்டாலின், குமார், பாலமுருகன், பாலு, பிரின்ஸ், பிலோமினா, CPF இயக்குனர்கள் சுப்பிரமணி, மனோகரன், துரைராஜ், மற்றும் நகர கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், மற்றும் தொமுச நிர்வாகிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மணமேல்குடி வட்ட சட்ட பணிகள் குழு சார்பில் தண்டலை நடுநிலைப் பள்ளியில் ஆலோசனைக் கூட்டம்





**புதுக்கோட்டை, பிப்.4:** புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள வட்ட சட்டப் பணிகள் குழு சார்பில் அதன் தலைவர் உத்தரவின் பெயரில் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சட்ட உதவிகளும் ஆலோசனைகளும் என்ற பெயரில் கருத்தரங்கு பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது வட்ட சட்ட பணிகள் குழு சார்பாக பணியாளர்கள் கலைவாணி மற்றும் நித்யா ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய சட்ட ரீதியிலான பிரச்சனைகள் பெண் குழந்தைகள் பாதுகாப்பு வாகனம் ஓட்டுதலில் கவனம் போன்றவைகளை எடுத்து கூறி அனைத்து நியாயங்களுக்கும் இலவசமாக வட்ட சட்ட பணிகள் குழுவை பொதுமக்கள் நாடலாம் போன்ற கருத்துக்களை தெரிவித்தனர்.

நீதிமன்றங்களில் அரசே இலவசமாக நியாயங்களை பெற்று தர வட்ட சட்ட பணிகள் குழு செயல்படுகிறது என தெரிவித்தனர் குடும்பத்தில் பிரச்சனை, பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைகள் ,வங்கிக் கடன் தொடர்பான பிரச்சனைகள், அரசின் சலுகைகளை பெறுவதில் பிரச்சனை போன்ற பல்வேறு காரணங்களுக்கு நிவாரணங்கள் பெற மணமேல்குடி நீதிமன்றத்தில் செயல்படும் வட்ட சட்ட பணிகள் குழுவை அணுகலாம் என தெரிவிக்கப்பட்டு அதற்கான விபரங்கள் அடங்கிய நோட்டீஸ் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் ஆசிரியர்கள் தேன்மொழி, மாலதி, சரண்ராஜ் மற்றும் பிரதீபா மாணவர்கள் சுமார் 65 பேர் கலந்து கொண்டனர்


# பள்ளிக்கு நல திட்ட உதவி வழங்கும் விழா



தூத்துக்குடி மாவட்டம் கருங்களம் ஊராட்சி ஒன்றியம் முறப்பநாடு புதுக்கிராமத்தில் கடந்த நூற்றாண்டாக செயல்பட்டு வரும் துவக்க பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டு தோறும் அழகிரிசாமி அறக்கட்டளை மூலம் நல திட்ட உதவிகள் வழங்கி வருகிறது. இந்த ஆண்டும் உதவி வழங்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் அறக்கட்டளை நிர்வாகிகள் திரு ஜானகிராமன் திரு ராதாகிருஷ்னன், திரு லோகராஜ், திரு சேகர் மற்றும் தொழிலதிபர் திரு பார்த்தசாரதி வழக்கறிஞர் திருமதி தீபா கலந்து கொண்டனர்.விழாவுக்கு வந்தவர்களை முன்னாள் ஊராட்சி துணைத்தலைவர் திரு சுப்பிரமணியன் வரவேற்றார் தலைமையாசிரியை திருமதி பாண்டிமாதேவி நன்றி தெரிவித்தார்.




# பிப். 6 முதல் தவெக விருப்ப மனு விநியோகம்!



**சென்னை, பிப்.04:** தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு பிப். 6 ஆம் தேதி முதல் விருப்ப மனு விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருப்ப மனுக்களை பிப்.14 ஆம் தேதி வரை தவெக தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தவெகவின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையாகத் திகழும் தமிழக வெற்றிக் கழகம், அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான நல்லாட்சியை வழங்கும் நோக்கில் வெற்றித் தலைவர் தலைமையில் தீவிரமாகக் களமாடி வருகிறது.

இந்தக் களத்தில் தேர்தல் அரசியல் என்பது, மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஆட்சி அதிகாரம் நம் கையில் இருந்தால் மட்டுமே தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை முழுவதுமாக நிறைவேற்ற முடியும். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

அந்த வகையில், வருகின்ற சட்டமன்றத் தேர்தலை நாம் எழுச்சியுடன் சந்திக்கின்றோம். தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நம் வெற்றித் தலைவரின் ஆசி பெற்ற வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் தோழர்கள் தங்களின் விருப்ப மனுக்களை அளிக்கலாம்.

இதற்கான விருப்ப மனுக்கள், வரும் பிப். 6 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் பிப். 14 ஆம் தேதி சனிக்கிழமை வரை தவெக தலைமை நிலையச் செயலகத்தில் வழங்கப்படுகின்றன.

பிப்ரவரி 6ஆம் தேதி அன்று நண்பகல் 12 மணி முதல், விருப்ப மனுக்களைப் பெறலாம். இதர நாள்களில் காலை 10 மணி முதல், மாலை 6 மணி வரை விருப்ப மனுக்களைப் பெறலாம்.

விருப்பம் உள்ளவர்கள் அவற்றைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும். இதைத் தமிழக வெற்றிக் கழகத் தலைவர், வெற்றித் தலைவரின் ஆணைக்கிணங்க, தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# "அரசியலில் நடிப்போரை மக்கள் ஏற்க மாட்டார்கள்" – ராஜேந்திர பாலாஜி



**சிவகாசி, பிப்.04:** "நடிகராக இருந்து அரசியலுக்கு வந்த எம்ஜிஆர் அரசியலில் நடிக்கவில்லை. இன்று வரக்கூடிய நடிகர்கள் அரசியலிலும் நடிக்கிறார்கள். அரசியலில் நடிப்பவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.

சிவகாசியில் முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின் செய்தியாளர்களிடம் ராஜேந்திர பாலாஜி கூறியது: "காங்கிரஸ் ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட பிரதமர் மோடி பிரதமர் ஆன பின்னர்தான் தமிழகத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனால்தான் மத்திய பட்ஜெட்டை அதிமுக வரவேற்கிறது. அதிமுக எப்போதும் யாருக்கும் அடிமை கிடையாது.

தமிழகத்தில் மீறிப் பேசும் திமுக, டெல்லிக்கு சென்றால் தங்களை காப்பாற்றிக் கொள்ள மத்திய அரசுக்கு அடிபணிந்து போவதை வழக்கமாக வைத்துள்ளது. அதிமுக - பாஜக அன்பான கூட்டணி, திமுக - காங்கிரஸ் வைத்துள்ளதுதான் அடிமைக் கூட்டணி. அனைத்து கருத்து கணிப்புகளிலும் அதிமுக கூட்டணி முன்னணியில் இருப்பதாக வந்து கொண்டிருக்கின்றன. இதை பொறுக்க முடியாதவர்கள் ஊழல் கட்சி எனக் கூறி வருகின்றனர்.

நடிகராக இருந்து அரசியலுக்கு வந்த எம்ஜிஆர் அரசியலில் நடிக்கவில்லை. இன்று வரக்கூடிய நடிகர்கள் அரசியலிலும் நடிக்கிறார்கள். அரசியலில் நடிப்பவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ரூ.200 டிக்கெட்டை ரூ.2,000-க்கு விற்பனை செய்து சம்பாதித்தவர்கள், ஊழல் குறித்து பேசுகின்றனர்.

பட்டாசு, தீப்பெட்டிக்கு ஜி.எஸ்.டி வரியை குறைக்க வைத்தது அதிமுக. மத்திய அரசுடன் இணக்கமாக இருந்து மக்களுக்கு வேண்டிய திட்டங்களை பெறும் முதல்வர் தான் தமிழகத்துக்கு தேவை" என்றார்.

# பாஜக தேர்தல் பொறுப்புகளில் இருந்து அண்ணாமலை விலகல்!

**சென்னை, பிப்.04:** பாஜக தேர்தல் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஓரிரு மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி கிட்டத்திட்ட இறுதி செய்யப்பட்டு பிரசாரத்தையும் தொடங்கியுள்ளது.

சிங்காநல்லூர், விருகம்பாக்கம் உள்ளிட்ட 6 தொகுதிகளுக்கு பாஜகவின் பொறுப்பாளராக அண்ணாமலையை நியமித்து கட்சி தலைமை உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை கவனித்துக் கொள்ள வேண்டியிருப்பதால், தேர்தல் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அண்ணாமலை அறிவித்துள்ளார்.

மேலும், செய்தியாளர்களுடன் அண்ணாமலை இன்று பேசியதாவது:

"பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு ஏற்றுக்கொண்ட 16-வது நிதிக்குழுவின் பரிந்துரை தமிழகம் பலன் அடைந்துள்ளது. குறிப்பாக வரி பகிர்வில் நாட்டின் வளர்ச்சிக்கு 10% நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது, இது எதிர்கட்சிகளின் வாயை அடைத்துள்ளது.

திமுக அமைச்சர்களை அழைத்து அண்ணாவை பற்றி 10 வரிகள் எழுதச் சொன்னால் யாருக்கும் எழுதத் தெரியாது. இன்றைக்குகூட தேர்வு வைத்து பாருங்கள், யாருக்கும் தெரியாது. அண்ணா... அண்ணா... என்று அவர் பிறந்தநாள், நினைவுநாளில் பேசுவதை மட்டுமே வாடிக்கையாக வைத்துள்ளனர். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில்தான் தேர்தலை சந்திக்கப் போகிறோம். அவர்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முதல்வர் வேட்பாளர். திமுக - காங்கிரஸ் கூட்டணி உடைந்த கூட்டணி போன்றது. விஜய் கட்சிக்கு என்ஜினே இல்லை. விஜய் கட்சியின் என்ஜினை ஓட்ட யார் இருக்கிறார்? மக்களை சிந்திக்க வைக்கும் வகையில் விஜய்யின் பேச்சு இல்லை. விசில் மற்றும் கைதட்டலுக்காகவே விஜய்யின் பேச்சுகள் இருக்கின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com